# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 30 செவ்வாய்க்கிழமை (16.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :263


## கதிர்காமரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்



கொழும்பு,ஓக16

கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரது பூதவுடல் நேற்று மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பூரண அரச மரியாதைகளுடன் அக்கினியுடன் சங்கமமாகியது. வெளிநாட்டு, உள்நாட்டு பிரமுகர்களும், பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். முன்னதாக அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் முதல் வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு ஆயிரக் கணக்கான பொதுமக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

கொழும்பு - 07 விஜேராம மாவத்தையிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கதிர்காமரின் பூதவுடல் ஊர்வலமாக சுதந்திர சதுக்கத்திற்கு எடுத்துவரப்பட்டது. முப்படையினரின் மரியாதைகளுடன் அலங்கார வாகனத்தில் கொண்டுவரப்பட்ட அவரது பூதவுடல் சுதந்திர சதுக்கத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)



கதிர்காமரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங், இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

# ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமே

# ஆணையாளர் உறுதியாக அறிவிப்பு!

## உயர்நீதிமன்றத்திற்கு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்16

ஜனாதிபதியின் பதவிக்காலம் எப்போது முடிவடைகிறது? ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடமா அடுத்த வருடமா? என்றெல்லாம் கடந்த பல வாரங்களாக அரசியல் வட்டாரங்களில் நிலவிய பெரும் சர்ச்சைக்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

1999 டிசெம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்ட சத்தியப் பிரமாணமே அவரின் இரண்டாவது பதவிக்காலத்திற்கான சட்டபூர்வமான சத்தியப்பிரமாணம் என தாம் ஏற்றுக்கொள்கிறார் எனத் தேர்தல் ஆணையாளர் நேற்று உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இதன்படி தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் முதலாம் பிரதிவாதி என்ற அடிப்படையில் தனது நிலைப்பாட்டை நேற்று உயர்நீதிமன்றத்திற்கு தேர்தல் ஆணையாளர் சத்தியக் கடதாசி மூலம் அறிவித்திருக்கிறார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்க உறுப்பினர் தம்புள்ளவில் கைது!

தம்புள்ளவில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவின் முக்கிய உறுப்பினர் எனக் கருதப்படும் இவரிடம் விடுதலைப் புலிகள் இயக்க அடையாள அட்டையும் மூன்று இளம் பெண்களின் புகைப்படங்களும் இருந்தன என்று தம்புள்ள பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை கண்டியிலிருந்து தம்புள்ள நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் சந்தேகத்துக்குரிய நபரொருவர் பயணிக்கிறார் எனக் கிடைத்த தகவலொன்றை அடுத்து குறிப்பிட்ட பஸ்ஸை வழிமறித்த பொலீஸார் மேற்படி (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனநாயகத்தை அழித்து நாட்டை கூறுபோட முயலும் புலிகளின் திட்டத்தை முறியடிக்க அணி திரளுங்கள்!

## உலகநாடுகளையும் அழைக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,ஓக.16

ஜனநாயகத்தை அழித்தொழித்து நாட்டைக் கூறுபோடமுனையும் புலிகளின் திட்டத்தைத் தடுத்து நிறுத்த அனைத்துத் தரப்பினரும் முன்வரவேண்டும். நாட்டைக் காப்பாற்றவேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. எமது இந்த முயற்சிக்கு சர்வதேச சமூகமும் ஒத்துழைக்கும் என நாம் கருதுகிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

படுகொலை செய்யப்பட்ட வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதி நிகழ்வு நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. அதில் இரங்கலுரை ஆற்றிய போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் இதுபற்றி கூறியதாவது :-

கதிர்காமர் இந்த நாட்டின் தேசபக்தர். எமது நாட்டுக்காக அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. நாம் அவரை ஒரு யுகபுருஷராகவே கருதுகின்றோம். அவரைக் கொலை செய்ததன் மூலம் எமது அரசின் கட்டமைப்பைச் சீர்குலைக்கப் புலிகள் முயற்சிக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா, ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட காமினி திஸநாயக்க, இந்தியப் பிரதமராக (16ஆம் பக்கம் பார்க்க)

## கொலையாளி இருந்த வீட்டில் பணிபுரிந்த ஏழு தமிழ் இளைஞர்கள் தேடப்படுகின்றனர்

கொழும்பு,ஓக.16

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சுட்டுக்கொன்ற கொலையாளி தங்கியிருந்த வீட்டுக்கு வந்து சென்ற ஏழு தமிழ் இளைஞர்களைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் அந்தவீட்டில் வெவ்வேறு பணிகளுக்காக குறுகிய காலம் அங்கு தங்கிப் பணிபுரிந்துள்ளனர் என்பது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

பணியாளர்கள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளின் உளவாளிகளே அந்த வீட்டுக்கு வந்து தங்கிச் சென்றிருக்கலாம் (16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் வெற்றிபெறும் வரை பிறந்தநாள் கொண்டாடமாட்டேன்

### தமிழக நடிகர் விஜயகாந்த் தெரிவிப்பு

சென்னை,ஓக.16

"உண்மையான தமிழன் ஒவ்வொருவனும் பிரபாகரனுக்கு ஆதரவு தெரிவிப்பான். அந்த வகையில் பிரபாகரன் வெற்றிபெறும் நாள்வரையில் நான் எனது பிறந்தநாளைக் கொண்டாடமாட்டேன்" என்று கூறியிருக்கின்றார் தமிழக நடிகர் விஜயகாந்த்.

தமிழ்த் திரைப்பட நடிகரான விஜயகாந்த் இலங்கை ரசிகர்களிடமும் அமோக வரவேற்பைப் பெற்றவர். அண்மையில் அவர் தனி அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்தார். அதனது முதலாவது அரசியல் மாநாடு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி நடக்கவுள்ளது. இந்த மாநாட்டில் 2லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்வார்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தினரால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் என்கிறார் கஜேந்திரன்

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.16

பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கட்டடத்தில் உள்ள தமது அலுவலகம் முன்பாக நேற்று அதிகாலை 2 மணியளவில் படையினர் ஆயுதபாணிகளாக - அச்சுறுத்தும் வகையில் - மறைந்திருந்தனர் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

தாக்குதல் நடத்தும் நோக்குடனேயே படையினர் இவ்வாறு அங்கு ஒளிந்திருக்கின்றனர் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் கஜேந்திரன் எம்.பி. தெரிவித்திருக்கிறார்.

15.08.2005 திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினர் எனது அலுவலகம் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கட்டடத்தின் முன்புறமாக உள்ள மதிலுக்குப் பின்னால் பதுங்கியபடி அலுவலகக் கட்டடத்தினை நோக்கித் தாக்குதுல் நடத்தத் தயாரான நிலையில் இருந்துள்ளனர். அந்த வேளையில் நாய்கள் உரத்த குரலில் குரைத்தபோது அலுவலகத்தில் தங்கியிருந்த இணைப்பாளர், எனது உதவியாளர்கள் மற்றும் மாணவர்கள் அலுவலகத்துள்ளிருந்தபடி முன்புறத்ததைப் பார்த்தபோது இராணுவத்தினர் துப்பாக்கிகளை மதிலுக்கு மேலாக அலுவலகத்தை நோக்கி நீட்டியபடி பதுங்கி இருந்ததை அவதானித்துள்ளனர்.

இராணுவத்தினரின் இச்சசெயல் எனது உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன், எனது மக்களுக்குச் சேவையாற்ற முடியாத நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மாணவர் பேரவைக் கட்டடத்தில் தங்கி நின்று கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் சுமுகமாகத் தமது கல்வியைத் தொடரமுடியாத நிலையும் தோன்றியுள்ளது. மரணப் பயத்துடன் வாழவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இராணுவத்தினரின் இச்செயல் ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் என்பதுடன் போர்நிறுத்த மீறலுமாகும் என்பதனைச் சுட்டிக்காட்டுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும் என வேண்டுகிறேன். - என்று அந்தக் கடிதத்தில் கஜேந்திரன் தெரிவித்திருக்கிறார். (ஐ)


## இரு போராளிகள் வீரச்சாவு

கிளிநொச்சி,ஓக.16

திருகோணமலை அன்புவெளிபுரத்தில் கடந்த மாதம் 10ஆம் திகதி இராணுவப் புலனாய்வுத்துறையினர் நடத்திய தாக்குதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

லெப்டினன்ட் கேணல் டிக்கான் அல்லது வேங்கை(செபஸ்தியான்பிள்ளை ஜெயச்சந்திரன் - ஆறாம் வட்டாரம், சாம்பல்தீவு, திருமலை) என்பவரும் -

வீரவேங்கை இளம்புலி (குணசிங்கம்அனுசன் - ஆறாம் கட்டை,பெரியகுளம், நிலாவெளி, திருமலை) என்பவருமே வீரச்சாவடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)



நன்றி : சண்டே ரைம்ஸ்

## அமைச்சர் கதிர்காமர் கொலை:

# மீட்கப்பட்ட ஆயுதங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு!

கொழுப்பு,ஓக.16

கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் கதிர்காமரைச் சுட்டுக்கொன்றவர்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஆயுதங்களை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸார் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

அமைச்சர் கதிர்காமரின் புல்லர்ஸ் வீதி இல்லத்திற்கருகில் உள்ள பற்றைக்குள்ளிருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கிரனேட் லோஞ்சர், ரி-82 ரக குண்டு, 40 மி.மி வெற்று ரவைகள் எட்டு என்பன நேற்று சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கையொன்றை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

அமைச்சர் கதிர்காமரின் கொலை தொடர்பில் புல்லர்ஸ் வீதிச் சோதனைச் சாவடிக்கருகில் கைதுசெய்யப்பட்ட ஐயன் இராஜ்குமார் என்ற இளைஞன் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேசமயம், கடந்த 30 ஆம் திகதி விஜேராம வீதியிலுள்ள அமைச்சர் கதிர்காமரின் இல்லத்தை வீடியோ எடுத்தார்கள் எனக் கூறப்படும் சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நீதிவான் நேற்று நிராகரித்தார். இந்தச் சந்தேகநபர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேகநபர்களான மாணிக்கம் தமிழினியன், ரங்கன் ஜனகன் ஆகிய இருவரையும் பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணி ரோஹான் அபேவர்தன மன்றில் கோரிக்கை விடுத்தார். ஆனால், இதற்கு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பலத்த ஆட்சேபம் தெரிவித்தனர். இந்தச் சந்தேகநபர்களுக்கும், அமைச்சர் கதிர்காமரின் கொலைக்கும் சம்பந்தம் இருக்கலாமெனக் கருதப்படுவதால், மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கு இவர்களிருவரும் தேவையென கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் தெரிவித்தனர். இதையடுத்தே நீதிவான் அவர்களுக்குப் பிணை வழங்க மறுத்தார். (ஐ-க)

## ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவிப்பு

லண்டன்,ஓக.16

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டித்திருக்கிறது ஐரோப்பிய ஒன்றியம். அதேசமயம், அமைதி முயற்சிகள் இலங்கையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டுமென்றும் அது வலியுறுத்தியிருக்கின்றது.

25 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையை பிரிட்டன் வகிக்கிறது. இலங்கையில் நிலவும் பிரச்சினைகளுக்கு வன்முறை ஒரு தீர்வாகாது என்றும் ஒன்றியம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

வன்முறைகளுக்குகெதிரான மக்கள் ஒன்றுபட்டு இறுதியாக இடம்பெற்ற இந்தத் தீவிரவாத செயலினால் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தமும் அமைதி முயற்சிகளும் பாதிக்கப்படாமிலிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (ஐ-க)

## பாலையூற்றில் கிரனேட் வீச்சு

திருகோணமலை,ஓக்.16

திருகோணமலை பாலையூற்றுப் பூங்கா பள்ளிவாசல் அருகில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை 3 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. இந்தக் தாக்குதலில் வீட்டின் யன்னல், கதவுகள் சேதமாகின. எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இந்தத் தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை என்று பொலீஸார் கூறினர்.

இது தொடர்பாக அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். கிரனேட் வீச்சினால் சேதமடைந்த வீடு முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# இந்திய சுதந்திரதின வைபவம் கொழும்பில் எளிமையாக நடந்தது

கொழுப்பு,ஓக.16

இந்தியாவின் 59 ஆவது சுதந்திர தினம் நேற்று கொழும்பில் மிகவும் எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் இந்தியத் தேசியக் கொடியை எற்றிவைத்து இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் சுதந்திர தினச் செய்தியை வாசித்தார்.

இல்ங்கையின் வெளிவிவகார அமைச்சர் கதிர்மாரின் மறைவையொட்டி நிகழ்வின் ஆரம்பத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கான இந்திய சுதந்திர தினத்தன்று கொழும்பில் இந்தியத் தூதுவர்களாகக் கடமையாற்றுபவர்கள் தமது கருத்துகளையும் வெளியிடுவது வழமை. எனினும், நேற்று நடந்த சுதந்திரதின வைபவத்தில் கலந்துகொண்ட இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் தனிப்பட்ட ரீதியில் உரை எதனையும் ஆற்றவில்லை. வழமையை விட மிகவும் அமைதியான முறையில் வைபவங்கள் நடைபெற்று முடிவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நேற்றைய தினம் தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாகவே நிகழ்வுகள் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றன என தூதரக வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டது.

## முன்னாள் கிராம அலுவலரை திருமலையில் காணோம்!

திருகோணமலை,ஓக்.16

திருகோணமலை அன்பு இல்லத்தின் முன்னாள் நிர்வாகியும், முன்னாள் கிராம அலுவலருமான எஸ்.சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் முதல் காணாமற்போயுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடிப் பகுதியில் வைத்து இவர் காணாமற்போயுள்ளார். இவர் பயணம் செய்த மோட்டர் சைக்கிள் அநாதரவாகக் கிடந்த நிலையில் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

எஸ்.சுந்தரலிங்கம் மூதூர் கட்டைப்பறிச்சானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் காணாமற்போனமை தொடர்பான விடயம் மர்மமாகவே உள்ளது என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். (ஐ-க)

# பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில் வீடு மீது கிரனேட் தாக்குதல்!

அக்கரைப்பற்று,ஓக.16

கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயிலின் சம்மாந்துறை இல்லத்தின் மீது கிரனேட் வீசப்பட்டுள்ளது. மத்திய வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இச்சம்பவம் நேற்று அதிகாலை நடைபெற்றது.

இக்குண்டுவீச்சுச் சம்பவத்துக்கு முன்னர் பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளரின் இல்லம் மீதும் குண்டு வீசப்பட்டுள்ளது. பிரதியமைச்சரின் இல்லத்துக்குள் கிரனேட் வீசப்பட்டதைத் தொடர்ந்து சரமாரியாகத் துப்பாக்கிவேட்டுகளும் தீர்க்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் வீட்டுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளபோதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அமைச்சரின் ஊடகத்துறை அதிகாரி அன்சார் தெரிவித்தார்.

தாக்குதல் இடம்பெற்றபோது பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் வீட்டில் இருக்கவில்லை. ஆனால், அவரது உறவினர்களும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் அங்கிருந்தார்கள். அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தொடர்பாகப் பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கெண்டுவருகின்றனர். (ஐ-க)

# யாழ். நகரிலும் சாவகச்சேரியிலும் வர்த்தக வங்கிக் கிளைகள்

யாழ்ப்பாணம்,ஓக.16

வர்த்தக வங்கியின் இரண்டு புதிய கிளைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். நகரின் மையப்பகுதி மற்றும் சாவகச் சேரி நகரப் பகுதி ஆகிய இடங்களிலேயே இந்த வங்கிக் கிளைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாக வர்த்தக வங்கியின் பிரதம முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வாடிக்கையாளரின் நன்மை கருதி இந்த இரண்டு கிளைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் இதனால் நன்மை பெறுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-12)

# அணுஆயுதத் தொழில்நுட்பத்தை பாகிஸ்தான் மேலும் வலுப்படுத்தும்

## சுதந்திரதின விழாவில் பிரதமர் உறுதி



இஸ்லாமாபாத், ஓக.16

நாட்டின் அணு ஆயுத, ஏவுகணை தொழில் நுட்பத் திறனை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

பாகிஸ்தானின் 59ஆவது சுதந்திர தினத்தை யொட்டி இஸ்லாமாபாத்தில் நடந்த விழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அவர் பேசியதாவது:-

அண்டை நாட்டில் (இந்திய பெயரை குறிப்பிடாமல்) ஏற்பட்டுவரும் மாற்றத்துக்கு ஏறப நாட்டின் அணு ஆயுத, ஏவுகணை தொழில் நுட்பத்திறனை மேம்படுத்தும் வகையில் பாகிஸ்தான் தொடர்ந்து செயற்படும்.

அணு ஆயுதங்களைச் சுமந்து சென்று இலக்கைத் தாக்கக் கூடிய 'பாபர் குரூஸ்' ஏவுகணையை சோதனை ரீதியில் சில தினங்களுக்கு முன் ஏவி வெற்றி அடைந்தோம்.

அதைத் தொடர்ந்து 1000 கிலோ மீற்றர் தூர இலக்கை தாக்கக் கூடிய ஏவுகணையை உருவாக்கும் பணி நடந்து வருகிறது.


அணு ஆயுத வல்லமை மிக்க நாடாக பாகிஸ்தான் வளர்ந்து விட்டது.

இந்தியாவுடன் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் அந்த நாட்டுடன் ஒத்துழைப்பு, நட்புறவை மேம்படுத்த பாகிஸ்தான் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

சுயேச்சையான வெளியுறவுக் கொள்கையைப் பாகிஸ்தான் பின்பற்றி வருகிறது. பிராந்திய அமைதிக்கும் பாதுகாப்புக்கும் சாத்தியமான அனைத்துப் பங்களிப்பையும் பாகிஸ்தான் அளிக்கும் - என்றார் (8)

# பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா தீவிர நடவடிக்கை

## சுதந்திரதின விழாவில் மன்மோகன்சிங் அறிவிப்பு



புதுடில்லி,ஓக.16

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்க இந்தியா தொடர்ந்தும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.

இந்தியாவின் 59 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு டில்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று தேசியக் கொடியை ஏற்றிவைத்து நாட்டுமக்களுக்கு உரையாற்றினார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவுகூரும் நாளாக சுதந்திரதினம் அமைந்துள்ளது என பிரதமர் தமது உரையில் குறிப்பிட்டார்.

மகாத்மாகாந்தியின் தியாகங்களைப் பட்டியலிட்ட பிரதமர், நாட்டின் குடிமக்கள் அனைவரும் பாகுபாடில்லாமல் சமமாக நடத்தப்படவேண்டும் என காந்தி விரும்பியதாகத் தெரிவித்தார். மகாத்மாவின் உறுதி மொழிகளை நிறைவேற்றத் தமது அரசு பாடுபடுவதாகவும் மன்மோகன்சிங் தெரிவித்தார்.


காஷ்மீர் வன்முறை தொடருமானால் அதையொடுக்க மத்திய அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடருமானால் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசு தயங்காது எனவும் எச்சரித்தார்.

பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பாகிஸ்தான் அரசு அரை மனதுடன் செயற்படுவதாக மன்மோகன்சிங் குற்றஞ் சாட்டினார். பயங்கரவாதிகளின் முகாம்களை ஒழிப்பதில் பாகிஸ்தான் முழு மூச்சுடன் செயற்படவேண்டும் - என்றார். (8)

# ஈராக் தீவிரவாதிகளிடம் அமெ: தோற்றுப்போகாது

## அடித்துக் கூறுகிறார் அதிபர் புஷ்



டெக்ஸாஸ்,ஓகஸ்ட்16

**தற்போதைய சூழ்நிலையில் ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளை வாபஸ்பெறும் எண்ணம் இல்லை. அங்கு எமது படைகளுக்கு எதிராகத் தீவிர வாதிகள் நடத்திவரும் தாக்குதலினால் எங்கள் மன உறுதியைக் குலைத்து விட முடியாது; - எம்மை வெற்றிகொள்ள இயலாது.**

**- இவ்வாறு அமெரிக்க அதிபர் புஷ் அமெரிக்க வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-**

ஈராக்கில் தற்போது நெருக்கடியான சூழல் நிலவிவருகிறது. எனவே, அரசியல் மற்றும் இராணுவ ரீதியான உதவிகளை அமெரிக்கா தொடர்ந்து வழங்கிவருகிறது. அங்கு அமைதியான சூழல் ஏற்படும்வரை படைகளை வாபஸ்பெறும் எண்ணம் இல்லை. தற்போதைய சூழலில் ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ்பெற்றால், தீவிரவாதத்திற்கு எதிராக நடத்திய போர் அர்த்தமற்றதாகிவிடும். தீவிரவாதிகளால் அமெரிக்கப் படைகளைத் தோற்கடிக்கமுடியாது. நாங்கள் எங்களின் மன உறுதியை இழந்தால் மட்டுமே, தீவிரவாதிகள் எங்களை வெற்றிகொள்ள முடியும். இது என்னுடைய காலத்தில் நிச்சயம் நடக்காது.

ஈராக்கில் ஜனநாயக ஆட்சிமுறை முழுமையாக அமுல்படுத்தப்படும்வரை அமெரிக்கப் படைகளை வாபஸ்பெறும் எண்ணம் இல்லை. ஈராக்கில் சுதந்திரமான ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்தவும், தீவிரவாதிகளின் குறுக்கீடுகள் இன்றித் தன்னிச்சையாக ஈராக் அரசு செயற்படவும், பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளவும் தேவையான உதவிகளை அமெரிக்கா வழங்கிவருகிறது - என்றார். (8)


# நியூசிலாந்து முன்னாள் பிரதமர் மரணம்

வெலிங்டன்,ஓக.16

நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் நேவிட் லாங் சிறுநீரகக் கோளாறு காரணமாக நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் காலமானார்.

கடந்த 1985 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டுகள் நியூசிலாந்தின் பிரதமராக இருந்தவர் நேவிட் லாங் (வயது 63). இவர் தொழிலாளர் கட்சியின் சார்பில் பிரதமராக இருந்தார். நேவிட் ஆட்சிக் காலத்தில் சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் நல்ல வளர்ச்சியை அந்நாடு பெற்றிருந்தது. அணு ஆயுத ஒழிப்பிலும் உலக அளவில் முக்கிய பணியாற்றியது. கடந்த 1995 ஆம் ஆண்டிலிருந்து பலவித உடல்நலக் கோளாறுகளால் அவதிப்பட்டு வந்த நேவிட் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அவரின் உடலில் பல வகையான பிளாஸ்மா சவ்வு ஒழுங்கீனங்கள் இருப்பதும் கண்டுபிடிக்கப் பட்டது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நேவிட்லாங் காலமானார்.(8)



கிரீஸ் தலைநகர் எதென்ஸில் சைப்பிரஸ் நாட்டு விமானமொன்று மலைமீது மோதி வெடித்துச் சிதறியதில் 6 விமானச் சிப்பந்திகள் உட்பட 121பேர் உயிரிழந்தனர். விமானம் விழுந்த இடத்தில் மீட்புப்பணிகள் நடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

உலக அரங்கில்

# சுனாமியில் 500 பேரைக் காப்பாற்றிய பெண்ணுக்கு 'கல்பனா சாவ்லா' விருது

## முதலமைச்சர் ஜெயலலிதா வழங்கினார்

சென்னை,ஓக.16

துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான 'கல்பனா சாவ்லா' விருதை கடலூர் மாவட்டம் சாமியார்ப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த ஆர். மீராவுக்குத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று வழங்கினார்.

சென்னை கோட்டை கொத்தளத்தில் 59ஆவது சுதந்திரதின விழாவில் தேசியக் கொடியேற்றி, வீரதீரச் செயல் மற்றும் சமுதாயத்தில் சிறப்பாகச் செயலாற்றிய பலருக்கு அவர் விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

கடலூர் மாவட்டம், சாமியார்பேட்டைக் கிராமத்தைச் சேர்ந்த மீரா; கிராம விபத்து நிர்வாகத்தின் கீழ் உள்ள முன் எச்சரிக்கைக் குழுவில் உறுப்பினராவார்.

2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் விபத்தின் பிடியில் இருந்து கிராம மக்களைக் காப்பது தொடர்பாகப் பயிற்சி பெற்றிருந்தார். கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி சுனாமி தாக்கியபோது கடல் நீர் கிராமத்திற்குள் புகுந்தது. அப்போது தனது உயிரையும் பொருட்படுத்தாது துணிச்சலுடன் முன்னெச்சரிக்கை செய்வதற்காகக் கடற்கரைக்கு விரைந்து சென்று 500 கிராம மக்களை கடற்கரைப் பகுதியில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கூறி அவர்களது உயிரைக் காப்பாற்றினார். அதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. (8)

# சிங்கப்பூர் அதிபராக மீண்டும் நாதன்

சிங்கப்பூர்,ஓக.16

சிங்கப்பூர் அதிபர் நாதன் மீண்டும் அதிபராகத் தேர்வுசெய்யப்படுவது உறுதியாகியுள்ளது.

அவருக்கு எதிராகப் போட்டியிட இருந்தவர்களை, மூன்று பேர் கொண்ட அதிபர் தேர்வுக்குழு தகுதிநீக்கம் செய்துவிட்டது.

இதையடுத்து நாளை புதன்கிழமை வேட்பு மனுத்தாக்கல் செய்தவுடனேயே, நாதன் மீண்டும் அதிபராவது அதிகாரபூர்வமாக உறுதியாகிவிடும். அடுத்த 6 ஆண்டுகளுக்கு அவர் அதிபராக இருப்பார். (8)






# ஈரானின் அணுத்திட்டம்பற்றி ஆராய ஐ.நா. குழு தெஹ்ரான் செல்கிறது

நியூயோர்க்,ஓக.16

ஈரானில் மேற்கொள்ளப்படவுள்ள அணு சக்தித் திட்டங்கள் குறித்து விவாதிக்க ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஒரு குழுவை ஈரானின் தலைநகர் தெஹ்ரானுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுப்புகிறது.

ஓராண்டுக்கு முன் யுரோனியம் செறிவூட்டல் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதாக ஐரோப்பிய யூனியன் நாடுகள் மற்றும் அமெரிக்காவுடனான பேச்சுக்களின்போது ஈரான் அறிவித்தது.

இந்நிலையில், யூரோனியத்தை எரிபொருளாக மாற்றும் பணியை, இஸ்பெஹான் என்ற இடத்தில் உள்ள தனது அணு நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது ஈரான்.

யூரேனியத்தைச் செறிவூட்டி மின்சாரம் தயாரிக்கவும் அமைதி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் தனது நாட்டுக்கு உரிமை இருப்பதாக ஈரான் திட்டவட்டமாகக் கூறியது.

இதையடுத்து, ஐ.நா. தனது குழுவை ஈரானுக்கு அனுப்பி, யுரோனியம் செறிவூட்டல் திட்டத்தால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் கேடு, நாட்டின் பாதுகாப்பு, திட்டத்தின் நோக்கம், தன்மை குறித்து அந்நாட்டுடன் விவாதிக்கத் திட்டமிட்டுள்ளது. (8)

# அமைச்சர் கதிர்காமரைச் சுட்டவர்களை நீதியின்முன் நிறுத்தியே தீருவோம்!

## பிரதமர் மஹிந்த சொல்கிறார்

வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைப் படுகொலை செய்த சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின்முன் நிறுத்துவோம் எனத் தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடையே கருத்துக் கூறுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் படுகொலை கோழைத்தனமானது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இப்படுகொலையின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின்முன் நிறுத்துவோம்.

இதுபோன்ற படுகொலைகளை எதிர்ப்பவர்கள் அனைவரும் பேதமின்றி ஒன்றிணையவேண்டும். குறிப்பாக சர்வதேச சமூகமும் எம்முடன் இணையவேண்டும். அப்படிச் செய்வதால்தான் இதுபோன்ற படுகொலைகளை நிறுத்தமுடியும். மிகவிரைவில் நாம் சூத்திரதாரிகளை நீதியின்முன் நிறுத்துவோம் - என்றார் அவர்.

கதிர்காமரின் கொலையையடுத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை அரசு தடைசெய்யுமா என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

'அது அரசியல் விவகாரம். அது பற்றிச் சிந்திக்கும் அவசியம் இப்போது வந்து விடவில்லை' - என்று பதிலளித்தார் பிரதமர்.

இலங்கை சுதந்திரக் கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன, கம்யூனிஸ்ட் கட்சி, ஈ.பி.டி.பி., இ.தொ.கா., நுஆ, ஜே.வி.பி., ஹெல உறுமய, நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (எ-க)

**ANNIVERSARY OFFER** ஆங்கில,சிங்கள நேரடி வகுப்பு - 2005

மூன்று மாதங்களைக் கொண்ட இந் நேரடி வகுப்பானது கதைத்தலுக்கான அழுத்தம், அன்றாட சொல்வள விருத்தியாக்கம், கதைத்தலுக்கான பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிகள் என்பவற்றினை அடிப்படையாக கொண்டது. இப்பயிற்சி வகுப்பில் ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**கட்டணம் ரூ.8000/=**

**ANNIVERSARY OFFER 3000/=**

16,17,18 ஆகிய திகதிகளில் மட்டுமே

**SAAMSTECH**

841, HOSPITAL RD, JAFFNA. PH: 021-4591571

## சந்நிதியில் நாளை வெள்ளோட்டம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆறுமுகப் பெருமானுக்கு உருவாக்கப்பட்டுள்ள புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இச்சித்திரத்தேர் அடியார்கள் வழங்கிய நிதியுதவியைப் பயன்படுத்தி புதிதாக அமைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (எ-203)

## சாவகச்சேரி நகர மாதிரிவரைபை சமர்ப்பிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

சாவகச்சேரி நகர புதியதிட்ட மாதிரி வரைபை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையை, யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் பணித்துள்ளார்.

இது தொடர்பான கூட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் வைத்தே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரை புதிய திட்டங்களூடாக நவீனமயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இதற்கென யாழ். அரச அதிபர் தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.(9-202-203)

**வீடு விற்பனைக்கு**

56/ 1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் 2 அறைகள், வரவேற்பறை, சமையலறை, குளியலறை கொண்ட முற்றுப்பெறாத வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:

திருமதி வ.பாலச்சந்திரன்

T.P.: 222 7365

(38970) (21.13.34)

**இலவச ஆங்கில டிப்ளோமாவுக்கான முதலாவது**

# நேரடி வகுப்பு

SAAMSTECH இன் இலவசத் தொலைக்கல்விப்பாடநெறியின் முதலாவது நேரடி வகுப்பு வரும் 19.08.2005 வெள்ளிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. 20 ம் திகதி நடைபெறவிருந்த இந்த இலவசநேரடிவகுப்பு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகாரணமாக 19ம் திகதி நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இப் பாடநெறியினை மேற்கொள்வோர் இலவச வகுப்புகளில் கலந்து அடுத்த புத்தகங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இடம் : யாழ் மத்திய கல்லூரி**

**காலம் :19.08.2005 (வெள்ளிக்கிழமை)**

நேரம் : 9.00 -11.00, 11.00 -1.00, 2.00 -4.00, 4.00 -6.00

(விரும்பிய ஒரு நேரத்தில் கலந்து கொள்ளலாம்)

**அனுமதி முற்றிலும் இலவசம்**

இப் பாடநெறியில் பயில்வோருக்கு 60 அலகுகள் கொண்டபுத்தகம், நேரடிவகுப்பு, பரீட்சை, சான்றிதழ் உட்பட முற்றிலும் இலவசம். இதுவரை பதிவு செய்யாதோர் 19.08.2005 வெள்ளிக்கிழமை நடைபெறும் இலவசநேரடிவகுப்பில் கலந்துகொண்டு பாடநெறியில் சேரலாம். இதுவரை பதிவுசெய்துள்ளோர் நீங்கள் அறிமுகப்படுத்திய நபர்களை அல்லது அறிமுகப்படுத்த விரும்புவோரையும் அழைத்து வரலாம்.

வகுப்பு பற்றிய மேலதிக விபரங்களுக்கு 4591571

**SAMSTECH,841, HOSPITAL ROAD, JAFFNA**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சைகள்

### வணிக முதற்தேர்வு - 2002 & 2003

### (துணைப் பாடங்கள்)

மேற்படி தேர்வுகளுக்கான துணைப்பாடங்களுக்கான (Ancillary Subjects) பரீட்சைகள் கலை முதற் தேர்வு- 2002 & 2003 பரீட்சைகளுடன் சேர்த்து நடத்தப்படவுள்ளன.

எனவே, வணிகமுதற்தேர்வு-2002 & 2003க்குத் தோற்றியோர் தமது துணைப்பாடங்களுக்கான அனுமதி அட்டைகளையும் நேரஅட்டவணைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 20.08.2005 தொடக்கம் பெற்றுக்கொள்ளமுடியும்

மேலதிக விவரங்களுக்கு: 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

15.08.2005 (சி-44503) (21.13.34) *பதிவாளர்.*

## கண்ணீர் அஞ்சலி



எமது நகராட்சி மன்றத்தில் காசாளராக கடமையாற்றிய

**தவராசா சுகந்தன்**

அவர்கள் 13.08.2005 இல் மரணமடைந்துவிட்டார். அவரது மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. (21.13.34) (38922)

**FIVE STAR**

CFLபல்புகளை மட்டும் வாங்குங்கள்

காரணம்:



* உண்மையான 80% மின்சார சேமிப்பு
* குறைந்த மின்சாரத்தில் அதிக பிரகாசம்
* 8000இந்குக் குறையாத ஆயுள்
* உலக தராதர சான்றிதழ், ஒருவருட உத்தரவாதம்
* வீட்டு உபகரணங்களைப் பாதிக்காது

அனுசரணை:-

**PRESIDENT CFL**

0777 306549

## 8ஆம் மாத நினைவஞ்சலியும் 23ஆவது பிறந்தநாள் நினைவலைகளும்

அன்னை மடியில் 16 - 08 - 1982



அலைகளின் பிடியில் 26 - 12 - 2004

அமரர்

## அற்புததேவன் காங்கேசன்

எட்டுத்திங்கள் ஆகிவிட்டால் ஆறிவிடுமா எம் துயரம்?
பூத்த உன் முகம் எங்கே?
புன்னகைக்கும் உன் சிரிப்பு எங்கே?
எங்களுடன் குதூகலித்த நாள் எங்கே?
உன் பாசமுகம் பார்த்து எட்டுத் திங்கள் ஆனதடா?
உன் செயல் அத்தனையும் நினைத்து, நினைத்து
மனம் கலங்குதே காங்கேயா?
உன் நினைவுகள் எம் நெஞ்சம்
இருக்கும்வரை நிலைத்திருக்கும்

26-12-2004 அன்று காங்கேசனுடன் கடலலையால் காவுகொள்ளப்பட்ட அமரர்களான அற்புததேவன், யதீஷன், பிரகலாதன் ஆகியோரின் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

கோண்டாவில். *சிவராசா, தர்மாக்கா, கண்ணா, தக்ஷா.*

(38923) (24-13-34-21)

## 996 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள்

வலி.தெற்கு,ஓக.16

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தினரால் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த 996 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வடமராட்சியில் உள்ள இன்பர்சிட்டி சுப்பர் மடம், பொலிகண்டி மேற்கு ஆகிய பகுதிகளைச்சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டன. (9-152)

## யாழ்.கோட்ட அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்ப்பாணக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலவச பாடநூல் விநியோகம் தொடர்பாக நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கோட்டத்திற்குட்பட்ட சகல அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ். தங்கராசா கேட்டுள்ளார். (எ-202)

## கண்ணீர் பூக்கள்



எமது அன்புக்குரிய நண்பர்

**த.சுகந்தன்(H.N.D.A)**

அவர்கள் 13.08.2005 அன்று காலமாகிவிட்டார். அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


*H.N.D.A இறுதி வருட மாணவர்கள் (2005),*
**யா/உயர் தொழில்நுட்ப நிறுவனம்.**

(38922) (21.13.34)

## மரண அறிவித்தல்

### கந்தையா - ஐயாத்துரை

### (ஆச்சாரி)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா-ஐயாத்துரை அவர்கள் 12.08.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும் புவனேஸ்வரியம்மா, யோகேஸ்வரி, சிவசுப்பிரமணியம்(ஜேர்மனி), பத்மாவதி (இத்தாலி), கோபாலரட்ணம் (மாவீரர் குமரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கெங்காதரன், சிவபாலன், கமலேஸ்வரி (ஜேர்மனி), சுகுமார் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், லுஜிந்தன், ரதி, விஜிந்தன், பஜீரதன், சுதர்சனன்(இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.08.2005) செவ்வாய்க்கிழமை, முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக, வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கெங்காதரன் (மருமகன்),
சிவசுப்பிரமணியம் (மகன்).

துவாளி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (சி-44504)(21-13-34)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## சொந்த அரசியல் நோக்கங்களை அடைவதற்கான முயற்சியா?

மறைந்த அமைச்சர் கதிர்காமரைக் கொன்றவர்கள் விடுதலைப் புலிகளே - என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஜனாதிபதி. ஆரம்ப விசாரணைகளில் இருந்து இவ்விடயம் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அமைச்சரின் கொலை சம்பந்தமான விசாரணை இன்னும் முற்றுப்பெறவில்லை. விசாரணை இப்போது ஆரம்ப நிலையிலேயே உள்ளது. முழு விசாரணைகள் முடிவடைய ஆகக் குறைந்தது பல மாதங்களாகலாம். அவ்வாறிருக்க, இப்போது ஒரு தரப்பின் மீது குற்றஞ் சுமத்துவது பொருத்தமானதா?

சந்திரிகா நாட்டின் தலைவி மட்டுமல்லர்; போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பங்காளிகளில் ஒரு தரப்பும் ஆவார். தக்க ஆதாரங்களுடனான இறுதி முடிவு கிடைக்காமல், அடுத்த தரப்பின் மீது பழியைச் சுமத்துவது விஷமத்தனமானது. சொந்த அரசியல் நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகவே இதனைக்கொள்ளமுடியும்.

இத்தனைக்கும், அமைச்சரின் படுகொலைச் சம்பவத்துடன் தமது அமைப்புக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்கனவே உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டார்.

கொலையின் உண்மையான பின்னணியைக் கண்டறிவதற்கு முயற்சிக்காமல், விடுதலைப் புலிகள் மீது பழிபோடும் வழமையான பாணி என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச ரீதியில் புலிகளுக்கு அபகீர்த்தியை உண்டாக்குவதற்காக, தீவிரமாக முயன்றுவந்த அமைச்சரின் பிரசார ராஜதந்திரம் இப்போது பலவீனம் அடைந்துள்ளது. இந்தக் கட்டத்தில் அவரை இலக்குவைத்துக் கொல்லவேண்டிய தேவை இல்லை - என்றும் தங்கள் நிலைப்பாட்டினை அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதி அதனைக் கருத்தில் எடுக்கவில்லை. விடுதலைப் புலிகளே இந்தக் கொலையைச் செய்தார்கள் என்ற கருத்தையே மனதில் ஊன்றிப் பதித்து, ஆவேசமாகப் பேசியுள்ளார்.

ஜனாதிபதி ஞாயிற்றுக்கிழமை இரவு தொலைக்காட்சியில் ஆற்றிய உரையிலும் சனிக்கிழமை விடுத்த செய்தியிலும் சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தை அரசின் பக்கத்திற்கு ஈர்த்திழுக்கும் வகையிலான கருத்துக்களை அவர் அள்ளி வீசியுள்ளமை உன்னிப்பாக நோக்கப்படவேண்டியதாகும்.

போர் நிறுத்தத்தில் பற்றுறுதி கொண்டிருப்பதாகச் சொல்லும் விடுதலைப் புலிகள், அதனை மீறும் விதத்தில் நடந்துகொள்வது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல - என்று அவர் தமது தொலைக்காட்சி உரையில் கண்டித்திருக்கிறார்.

அதிகாரப் பகிர்வின் மூலம் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்ற தமது நிலைப்பாட்டை அடிப்படையாக வைத்து நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஜனாதிபதியின் உள்ளார்ந்த நோக்கம் என்பது தெளிவாகிறது. தமது நோக்கத்தை எய்துவதற்குச் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பையும் நாட்டு மக்களின் உதவியையும் அவர் கேட்டிருக்கிறார்.

இத்தனைக்கும் மத்தியில் இப்போது நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தவேண்டும் என்பதிலும் அவர் மிகவும் முனைப்பாக உள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தி அமைப்பதற்கு, முன்னாள் பிரதமரும் ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாகக் கைச்சாத்து இட்டவருமான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவையும் சந்திரிகா கேட்டிருப்பதாகத் தகவல்.

சனிக்கிழமையன்று ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கையும், நாட்டு மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அவர் ஆற்றிய உரையும் அவரது அரசியல் உள்நோக்கங்களைப் பிரதிபலிப்பனவாகவே தெரிகின்றன.

புலிகளே கொலையைச் செய்தவர்கள் என்பதை முன்னிறுத்தி, அதிகாரப்பரவல் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குச் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவது -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வசதியுடன் ஏற்கனவே சமஷ்டி முறைத் தீர்வுவரை சென்ற நகர்வைத் தடுத்துவிடுவது. அதற்காக என்ன பாடுபட்டும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடைத்துக்கொள்வது -

அதனைச் செயலாக்கும் பொருட்டு, விடுதலைப் புலிகளைக் கோபமுற வைப்பது -

போர்நிலையைக் கொண்டுவந்து, அவசரகாலச் சட்டத்தைத் தனது அரசியல் விருப்பங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவது.

மொத்தத்தில் -

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதற்கான ஒரு மையப் புள்ளியாக, கதிர்காமரின் படுகொலையை ஜனாதிபதி பயன்படுத்த முனையலாம் என்றவாறு, அவரின் கருத்துகள் அமைந்திருக்கின்றன என்பதனை நிராகரிக்க முடியாதல்லவா?

## வடக்கில் பின்தங்கிய பாடசாலைகளுக்கு சூரியஒளிமூலம் மின் வழங்க நடவடிக்கை

காரைதீவு,ஓக.16

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளுக்கு சூரியஒளி மூலம் மின்சாரம் வழங்க 'கார்ப்' திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வடக்கு - கிழக்கு மாகாண சபையினூடாக நிதியை வழங்கியுள்ளது.

102 பாடசாலைகளுக்கும், 26 பொதுக் கட்டடங்களுக்கும் சூரிய ஒளி மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்க இத்திட்டம் ஏற்பாடுசெய்துள்ளது.

முல்லைத்தீவு, துணுக்காய்ப் பகுதிகளில் 22 பாடசாலைகளுக்கும், 10 பொதுக்கட்டடங்களுக்கும், மன்னார் மாவட்டத்தில் 21 பாடசாலைகளுக்கும், 12 பொதுக்கட்டடங்களுக்கும், வவுனியா மாவட்டத்தில் 14 பாடசாலைகளுக்கும் இவ்வசதி கிடைக்கவிருக்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முறையே 15, 30 பாடசாலைகளுக்கும், அம்பாறையில் 07 பொதுக் கட்டடங்களுக்கும் இவ்வசதி கிடைக்கிறது. அதற்கான ஏற்பாட்டைத் திட்டத் தலைவர் ரி.லங்காநேசன் மேற்கொண்டு வருகிறார். (9-84)

## பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பாதையில் மணிக்கு ஒரு தடவை தரிப்பிட பஸ் சேவை

### பயணிகள் தரப்பில் கோரிக்கை

வடமராட்சி,ஓக.16

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பாதையில் மணிக்கு ஒரு தடவை என்ற நேரப்படி மட்டுப்படுத்தப்பட்ட தரிப்பிட பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தத்துக்கு முன்னர் இதுபோன்ற சேவை பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் நடத்தப்பட்டு வந்தது. அவ்வேளை, இச்சேவைமூலம் வடமராட்சிப் பிரதேச பயணிகள் கணிசமான நன்மையைப் பெற்றிருந்தனர்.

போதிய பஸ்கள் இன்மையால் இப்பாதையூடான பஸ்சேவை குறைவடைந்துள்ளது. இந்நிலையில், மினிபஸ்கள் சேவையிலீடுபடும் நேரமும் அதாவது, சென்றடையும் நேரம் ஒன்றரை மணித்தியாலமாகிவிடுகிறது. இதனால், இப்பாதை ஊடாகப் பயணிப்பவர்கள் நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ள மினிபஸ்களிலோ வடபிராந்தியப் போக்குவத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களிலோ இருக்கையைப் பெறும் வாய்ப்பு இல்லாமற் போய்விடுகிறது.

எனவே, குறித்தவேளையில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று கருமமாற்றிவிட்டுத் திரும்புவோரின் வசதி கருதி மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை அவசியம் எனப் பயணிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை - தற்போது யாழ். நகரிலிருந்து பருத்தித்துறைக்குத் தினமும் இரவு 8.10 மணிக்குக் கடைசி பஸ் புறப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இச்சேவையுடன் மேலதிகமாக கடைசி நேர பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9.30 மணிக்குப் புறப்படக் கூடியவாறு மற்றொரு சேவையை ஆரம்பிக்கவேண்டும் என்றும் - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-173)

## ஜனாதிபதி தலைமையில் விசேட மாநாடு

வடக்கு - கிழக்கு மாகாண தற்போதைய கல்வி நிலைமை தொடர்பாக ஆராயும் மாநாடு ஒன்று எதிர்வரும் 24ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி நிலைமை தொடர்பாக ஜனாதிபதிக்கு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அதிகாரிகள் விரிவாக எடுத்துக் கூறவுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாவட்ட கல்வி நிலை தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.மகாலிங்கம் தலைமையில் யாழ். மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். (எ-7)

## நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத 13 வீதிகள் வலி.தென்மேற்கில் புனரமைப்பு

வலி.தென்மேற்கு,ஓக.16

மானிப்பாயிலுள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் இப்பிரிவில் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்துவரும் 13 வீதிகள் மற்றும் ஒழுங்கைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதற்கென சபை நிதியிலிருந்து 54 லட்சத்து 12 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் -

இவ்வருட முடிவுக்குள் இவ்வீதிகளும் ஒழுங்கைகளும் திருத்தப்படவுள்ளன என்றும் -

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் மேரி ஜோசவ் சாந்தசீலன் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்.

புனரமைப்புச் செய்யப்படவுள்ள வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் விவரம் பின்வருமாறு:-

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் வீதி, பண்டத்தரிப்பு கேணிக்கட்டு வீதி, மாரீசன்கூடல், உயரப்புலம் கிறவல் வீதி, நவாலி அமெரிக்கன்மிஷன் த.க. பாடசாலை வீதி -

நவாலி பொன்னுச்சாமி வீதி, மாதகல் காஞ்சிபுரம் வீதி, மானிப்பாய் கேணிக்கரை ஒழுங்கை, மானிப்பாய் பட்டினசபை லிங் லேன், மானிப்பாய், மூணாமலை வீதி, மானிப்பாய் மெமோறியல் வீதி, மானிப்பாய் பழைய கராஜ் இணைப்பு வீதி, கட்டுடை கெனடி வீதி. (எ-135)

## வலிகாமம் தெற்கு விதவைகளுக்கு முரண்பாடு நீக்கப்பட்ட ஓய்வூதியம்

வலி.தெற்கு,ஓக.16

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விதவைகளில் ஒரு பகுதியினருக்கு முரண்பாடு நீக்கப்பட்ட ஓய்வூதியம் ஓகஸ்ட் மாதம் ஓய்வூதியத்துடன் இணைந்து வழங்கப்படவுள்ளது.

1996ஆம் ஆண்டுக்கு முன்னதான விதவைகள் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஓய்வூதிய முரண்பாடு வலிகாமம் தெற்குப் பிரதேச ஓய்வூதியப் பிரிவினரால் சீர்செய்யப்பட்டு வருகின்றது.

ஓய்வூதிய முரண்பாடு சீர்செய்யப்பட்டுள்ள ஒரு தொகுதி விதவைகளுக்கான கொடுப்பனவுகள் இம்மாதத்தில் வழங்கப்பட உள்ளன என்றும் ஏனையோர்களுடைய ஓய்வூதியங்கள் சீர் செய்யப்பட்டு அவர்களுக்கான ஓய்வூதியம் அடுத்தமாதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் வலி.தெற்குப் பிரதேச செயலகக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விதவைகள் ஓய்வூதிய முரண்பாடு நீக்கத்துக்காக ஓய்வுபெற்ற ஆசிரியர்களுடைய விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விவரப்பட்டியல்களும் இம்மாத ஓய்வூதியத்துடன் விதவைகள் ஓய்வூதியக்காரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(9-152)


### உதயவாக்கு

வாழ்க்கை மறைபொருளாக இருக்கிறது. அதனால்தான் ரம்மியமாக இருக்கிறது.

-காண்டேகர்.

### நாளை

ஆவணி 01
புதன்கிழமை
17.08.2005
திதி: துவாதசி
காலை 7.52 வரை
திரயோதசி
பின்னிரவு 5.32 வரை
நட்சத்திரம்: பூராடம்
பிற்பகல்: 12.33 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 - 01.35
(யாவும் பழைய நேரப்படி)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### வாத்தியங்கள் விற்பனைக்கு

புதிய யமகா ஓகன் (PSR 550), 2 வீணைகள் (ஏகாந்தம்), மிருதங்கம் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கெனடி, 315C, பரமேஸ்வராச் சந்தி, (பிள்ளையார் கோயில் முன்பாக) திருநெல்வேலி. (38910)

### கார் விற்பனைக்கு

நிசான் சனி சில்வர் முழுவதும் குளிரூட்டப்பட்ட Full Option Super Saloon விற்பனைக்கு உண்டு. காலை 8.30 - மாலை 5 மணி வரை மட்டும் தொடர்புகொள்ளவும். 396, நாவலர். வீதி, முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை, கையிலாய பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (38904)

### காணி விற்பனைக்கு

சூராவத்தை அம்மன் கோயிலுக்கு அருகில் மூன்று பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே.ரவிகாந்தன், சூராவத்தை, சுன்னாகம் T.P.: 021-222 5278, 0602-212762. (38894)

### வீடு, காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும். T.P.: 0114613157. (38750)

### தேவை

டாக்டர் ஒருவரின் 3 வயது ஆண் குழந்தையைப் பராமரிப்பதற்கு தேகாரோக்கியமும் நேர்மையும் உள்ள பெண் வேலையாள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 0773268030. (38871)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 17.08.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும் தொடர்பு: ராஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, ரஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், தாரகை - முதலாம்கட்டை, பருத்தித்துறை, P.ரவி சாவகச்சேரி, றாதா - மாவடி வட்டுக்கோட்டை. கௌரி ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, பண்டத்தரிப்பு, ஸ்ரீ ராம் கால்நடை தீவன விற்பனை நிலையம் - பருத்தித்துறை. (38914)

### தவறிவிட்டது

சாவகச்சேரி, கண்டி வீதியைச் சேர்ந்த இரத்தினம் தேவானந்த் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 770714125V) முகமாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கண்டி வீதி, சாவகச்சேரியிலுள்ள அம்பாள் பார்மஸியில் ஒப்படைத்துதவவும். T.P.: 0776991008. (சி-38339)

### பிள்ளைகள் தமிழ் பேசிப்பழக...

வெளிநாட்டவர்களே! உங்கள் பிள்ளைகள் யாழ்ப்பாணத் தமிழ் பேசிப்பழக, நாடகங்கள் நடிக்க அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாங்கிக் கொடுங்கள். 1) யாழ்ப்பாணமா? கொழும்பா? 2) எங்கள் நாடு 3) வானொலி நாடகம் எழுதுவது எப்படி? 4) இமயம். (38909)

### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு, அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ டாக்டர், எஞ்சினியர், விரிவுரையாளர், கணக்காளர் போன்ற மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: கல்யாணவேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (38916)


### சிறுவன் காயம்

பதினைந்து அடி உயரக் கட்டடத்திலிருந்து தவறிவீழ்ந்த சிறுவன் மதிலுடன் மோதித் தலையில் காயமடைந்தான்

இச்சம்பவம் கடந்த 7ஆம் திகதி சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நடராசா நிரூசன் (வயது10) என்ற சிறுவன் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டான். (9-117)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.


### சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

நவாலி, ஓக.16

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலின் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறும்.

இதனையொட்டி பிற்பகல் 3 மணி முதல் இடம்பெறும் நிகழ்வில் தலைமையுரையை ஆலய பரிபாலன சபைத் தலைவர் ச.சிவசோதி ராசாவும் ஆசியுரையை ஆலய பிரதம குரு சோ.கௌரீஸ்வரக் குருக்களும் அருளாசியுரையை நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்கள்.

மேலும் இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் க. கணேஷ், வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகன், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் மா. சாந்தரூபன், நவாலி கிழக்கு கிராம சேவையாளர் த. நித்தியானந்தம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுவார்கள். (த-100)

### சான்றிதழ் வழங்கல்

ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தில் கணனிக் கற்கையைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐ.ஐ.எஸ்.நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே. விக்னேஸ் கலந்துகொள்கிறார். (9)


உ

ஓம் ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

### ஏகாதசி உற்சவம்

நிகழும் பார்த்திப வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள் இன்று (16.08.2005) செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்கள் இந்த உற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீ மகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

(c/44100) ஆதீன மகாசபை.

### கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன (H.N.D.A) பழைய மாணவனும், நிறுவன (H.N.D.A) பழைய மாணவி கார்த்திகா அவர்களின் அன்புக் கணவருமான

**தவராசா சுகந்தன்**

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர் சங்கம்.

(38903)(21.13.14)

### ஜோதிடம்



**Pandit Kr. Luxumy Narasimha**

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடம் துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடம் இந்தியாவின் புகழ்பெற்ற கோள மாந்தீக ஜோதிடம் கணவன் -மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை - இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பலவகையான பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கும் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: **சிறி சவ்பாக்கிய இன்**

விருந்தினர் விடுதி,
235/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.: 021 222 6779, 077 9233070

(38883) (26.11.18.24)





உ

சங்குவேலி

அருள்மிகு ஸ்ரீசிவஞானப் பிள்ளையார்தேவஸ்தானம்



# புதிய சித்திரத்தேர் பரீட்சார்த்த பவனியும் (வெள்ளோட்டவிழா) தேர்த்திருவிழாவும்

திருவுங்கல்வியும், சீரும் தளைக்கவும்
கருணை பூக்கவும், தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகுமாளத்துப் பிள்ளையைப்பேணுவாம்.

எம் பெருமான் அடியார்களே!

நிகழும் 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் எம் பெருமானுக்காக நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய சித்திரத்தேர் வேலைகள் சுமுகமாக நிறைவேறி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இதன் முயற்சியாக வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி ஆவணித்திங்கள் முதலாம் நாளாகிய புதன்கிழமை மாலை 4 மணிக்கு புதிய சித்திரத்தேர் பரீட்சார்த்த பவனி (வெள்ளோட்டவிழா) நடைபெறும். இந்த நிகழ்ச்சியில் பிரதம ஆசாரியாராகிய **திரு.ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ்** அவர்களும் அவரைச்சார்ந்த குழுவினர்களும் கௌரவிக்கப்படுவர் அத்துடன் மிகக் குறுகிய காலத்தில் தேர்முட்டி அமைப்பு பாலிக்கக்கூடிய நிலையில் அமைத்துத் தந்த **திரு. சண்முகநாதன்** அவர்களும் கௌரவிக்கப்படுவர். மறுநாள் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி ஆவணித்திங்கள் 2 ஆம் நாளாகிய வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எம் பெருமான் புதிய தேரில் பவனி வருவார்.

**நிகழ்ச்சி விவரம்**

*17.08.2005 புதன்கிழமை மாலை 4 மணி புதியதேர் பரீட்சார்த்த பவனி (வெள்ளோட்டம்)*
*18.08.20005 வியாழக்கிழமை காலை 4 மணி விநாயகர் அபிஷேகம்*
*தொடர்ந்து நடேசர் அபிஷேகம்*

| | |
|---|---|
| காலை 6. மணிக்கு | - தேர்ப்பிரதிஷ்டை |
| காலை 8 மணி | - வசந்த மண்டபப்பூஜை |
| காலை 10 மணி | - தேரில் ஆரோகணித்தல் |
| மதியம் 12மணி | - இருப்படைதல், அர்ச்சனை |
| மதியம் 1 மணி | - வசந்த மண்டப அர்ச்சனை |

அடியார்கள் யாவரும் இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றி எம் பெருமானின் ஆசியையும் அருளையும் பெற்று உய்வீர்களாக. தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடைபெறும்.

ஸ்ரீ வா.பாலசுப்பிரமணியக்குருக்கள்,
தி.வ.மு.கிருபாகரன்
கௌரவ போஷகர்கள்

சி.பஞ்சாட்சரவேல்
தலைவர்.

தி.மகேந்திரராஜா
செயலாளர்.

கு.விஜயசுந்தரம்
தனாதிகாரி.

**தேர்த்திருப்பணிச்சபை.** (38905)(51-11-19)

# அரச திணைக்களங்களில் தமிழிற்கு உரிய இடம் வழங்கப்படவில்லை

## மக்கள்படும் அவதிகள் பற்றி ஜனாதிபதிக்கு மகஜர்

குடத்தனை,ஒக.16

இலங்கையில் உள்ள அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படாமையால் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். தமிழ் மொழியும் சிங்களமொழியும் அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் தமிழ் மொழி உதாசீனம் செய்யப்படுவது பெருங்கவலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆகவே, தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கி தமிழ்மக்களுக்கு விமோசனம் வழங்க வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதன் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:-

பெரும்பாலான அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுடைய பெயர்ப்பலகைகள், காரியாலய பெயர்ப்பலகைகள் கூட ஆங்கிலமொழியிலோ, தமிழ்மொழியிலோ இல்லாமல் உள்ளது. மேல் மாகாணசபை பதிவாளர் கந்தோரில் கூட தமிழில் கருமமாற்றுவது மிகக் கஷ்டமாகவே உள்ளது.

மாளிகாவத்தை ஓய்வூதியக் காரியாலயத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளராக ஒரேயொரு பெண்மணி மட்டுமே கடமையாற்றுகிறார். வடக்கு - கிழக்கிலிருந்தும் மலையகத்திலிருந்தும் ஓய்வூதிய நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு பலர் இந்த அலுவலகத்திற்கு வந்து வெறுங்கையுடனேயே செல்கின்றனர். பொது நிர்வாக அமைச்சினதும், தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சினதும் நிர்வாக சீர்கேடுகளேஇதற்குக் காரணமாகின்றன.

தமிழ்த் தட்டச்சு இயந்திரங்களும், தமிழ் தெரிந்தவர்களும் அரச திணைக்களங்கள்,கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் 10 வீதமாகவே உள்ளன. ஓய்வூதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களிருந்தும், மலையகத்திலிருந்தும் கொழும்புக்கே வரவேண்டியுள்ளது. அங்கு பதிவு அறையில் உள்ள விவரக் கொத்துகளைக் கூட அங்கு சேவையில் உள்ளவர்கள் தேடி எடுக்கமுடியாமல் இல்லை என்று கூறிவிடுகின்றனர். ஆனால், அவை அங்கேயே உள்ளன. தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இருந்து தனது கணவரின் ஓய்வூதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கொழும்புக்குச் சென்ற பெண்மணி ஒருவர் பலத்த கஷ்டங்களை அனுபவித்தார். பின்னர் கணக்காளர் ஸ்ரீவர்த்தனவிடம் நான் முறையிட்டதன் காரணமாகவே அவ்வேலை முடிவுற்றது. இக்குறைபாடுகள் பற்றிப் பலமுறை புகார் செய்தும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களிற்கு 25வீதமாவது தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திலும் தமிழ் மக்கள் தமது கருமங்களையாற்ற முடியாது தவிக்கின்றனர். அங்குகாடையர்களின் அட்டகாசங்களும், ஏஜெண்டுகளின் தொல்லைகளும் தலைவிரித்தாடுகின்றன. பம்பலப்பிட்டியில் உள்ள இந்த அலுவலகத்திற்குச் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் உள்ள கடைகளில் சமாதான நீதிவான்களின் றபர்சீல்கள் வைக்கப்பட்டு பதிவுசெய்து கொடுக்கப்படுகிறது. சமாதான நீதிவான்களின் கையெழுத்திற்கு 300ரூபா வாங்கப்படுகின்றது.

தமிழ்மக்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய இவ்வாறு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே, தாங்கள் இதுபற்றி நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டுவரும் தமிழ்மக்களுக்கு விமோசனம் வழங்கவேண்டும் - என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப-78)

# கரவெட்டி கூவில் பகுதியில் பாலர் முன்பள்ளிக்கு அடிக்கல்

கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தில் பாலர் பாடசாலை, ரூம் ரூ றீட் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படவிருக்கின்றது. இந்தப் பாடசாலைக்கான அடிக்கல்லை யாழ். மாவட்டத் திட்ட அமுலாக்கல் செயலகப் பணிப்பாளர் க.பாலையா அண்மையில் நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன், தேசிய எழுச்சிப் பேரவையின் வடமராட்சி இணைச் செயலாளர் ச.செவ்வந்திநாதன், தீபஜோதி சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர் க.அம்பிகைபாகன், ரூம் ரூ றீட் நிறுவனத்தின் கட்டட நிர்மாணிப்பாளர் சு. புவிநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-70)



பாலர் முன்பள்ளிக்கான அடிக்கல் நடப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படம்:- கரவெட்டிச் செய்தியாளர்)

## நல்லூரான் திருவடி - 1



நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே!
இரவுபகல் காணேனடி.

- யோகர்சுவாமிகள்.




இன்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
ஏழாம் திருவிழா
முருகனே நல்லைக் குமரனே! குகனே!!
வள்ளி மணவாளா வா! வா!! வா!!!
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
சரியான நேரம் காட்டும் கடிகாரங்களுக்குச் சிறந்த இடம்.
யாழ்ரன் மஸ்ரி சென்ரர்
48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel:021 222 6330.
(C/44093)


## அன்னதான மண்டபம் திறப்பு

நவாலி ,ஒக.16

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் பல லட்சம் ரூபா செலவில் புதிய அன்னதான மண்டபமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் தற்போது இடம்பெற்றுவரும் வருடாந்த பெருந்திருவிழாவையொட்டி தினமும் இந்த மண்டபத்தில் மகேஸ்வர பூசை இடம்பெற்றுவருகின்றது.

(த-100)

## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஒக.16

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் ஏழாம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரனின் பாட்டு இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்கள் பாக்கிய லட்சுமி நடராசா - வயலின், ரி. வரோதயன் - மிருதங்கம், எம். லோகேந்திரன் - கடம்.

(எ-203)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

ஏழாம்நாள் உற்சவம்



## குடிமுழுகிப் போய் விடுமே!

*வள்ளிதெய்வ யானையுடன் வந்துவிட்டான் வேலனம்மா*
*வல்லமையாய் நமக்கருளைத் தந்துவிட்ட தேவனம்மா*
*பாலெடுத்துத் தேனெடுத்து பழமும்கற் கண்டுவைத்து*
*நூல்எடுத்துத் தீபமிட்டு நோன்பிருந்து படையல் வைப்போம்*
*வாசலிலே வந்துவிட்டான் வண்ணமயில் வாகனனே*
*பேசாத ஊமைகளைப் பேசவைக்கும் வைத்தியனே*
*உள்ளே அழைத்திடுங்கள் உண்மையெனும் கோயிலுக்குள்*
*கொள்ளைவினைக் கூட்டமெல்லாம் குடிமுழுகிப்போய் விடுமே!*

**கவிமணி கந்தமுருகேசதாசனார்.**

## பொல்லா வினைகளெலாம் போம்

*நல்லை நகர்ப்பதியை நாடியே நாள்தோறும்*
*எல்லையிலாக் காவடிகள் ஏந்திவரும் - நல்லடியார்*
*காவடிக் கந்தனெனுங் காரணப்பேர் சூட்டினார்*
*சேவடிக்கே சேருஞ் சிறப்பு.*

*தூங்குதுலாக் காவடியை கண்டு பரவசத்தால்*
*ஓங்கியெழும் ஓசை உணர்வலைகள் - ஆங்கடியார்*
*பக்திப் பெருக்கைமிகக் கூட்டுதே நல்லூரின்*
*சக்திக் கிவைகளே சான்று.*

*ஊசிச் செடிலேற்றி ஊறுகளை உண்டாக்கி*
*ஆசிபெறக் காவடிகள் ஆடுவார் - நேசித்த*
*நல்லடியார் கூட்டத்தை நல்லூரிற் கண்டிறைஞ்சப்*
*பொல்லா வினைகளெலாம் போம்.*

**சி.இராசரத்தினம்.**

## கருணையைப் பெறுவோம்!

வண்ணமயிலேறி விளையாடும் முருகன்
வளமான நல்லையிலே உறைந்திட்ட குமரன்
எண்ணித் துதிப்போரைக் காக்கின்ற வேலன்
என்றும் தமிழர்க்குத் துணையான கந்தன்
அலங்கார சொரூபனாய் மஞ்சத்தில் வருகிறான்
அவலங்கள் நீங்கிட அருளினைப் பொழிகின்றான்
கலங்காது அவனிரு பாதங்கள் பணிந்தே
கருணையைப் பெற்றென்றும் வளமுடன் வாழ்வோம்!

**- புங்கை எம்.எம்.குமார்.**

## மேன்மையுறச் செய்குவாய்!

வள்ளி தெய்வானை சூழ
வலம் வந்து போகிறாய்
கள்ளமற்ற நாயகியர் உன்னை
கடிந்து கொள்வதில்லையோ?

மெள்ள மெள்ள தமிழர் சாதி
மேன்மை குன்றி மாள்வதை
கிள்ளிக் கிள்ளி சொன்னபோதும்
கேட்க மனது இல்லையோ?

பிள்ளை உள்ளம் கல்லாய்ப் போக
பிழையென்ன செய்தோம் யாம்
அள்ளிச் சொரியும் அன்பதெல்லாம்
அவமாய் போதல் நீதியோ?

கள்வன் உன்னைக் கவர்ந்திழுக்க
கனவான் ''யோகர்'' இங்கில்லையே
மெள்ள மெள்ளக் கண் விழித்து எம்மை
மேன்மையுறச் செய்குவாய்!

**- விகடகவி -**

## பிரித்தாளும் பேதமையைப் பேர்

*கண்ணின் கருமணியாய் காலமெலாம் காத்தெம்மை*
*மண்ணில் மலரவைக்கும் மாமணியே! - தண்ணொளியாய்*
*பீடுடைய உன்னடியார் பெருகி வருகையிலே*
*ஈடுனக்கு உண்டோ இனி?*

*தெள்ளு தமிழ்ஞான தெய்வத் திருமுருகா*
*துள்ளிவரும் பகையைத் துடைத்திடுவாய்! - கள்ளமிலா*
*கருத்தாழம் மிகுந்துவரும் கந்தவடி வேலவனே*
*பிரித்தாளும் பேதமையைப் பேர்!*

- சாவையம்பதி **கே.மகேஸ்வரி**

# பற்றரிகள்



ரேடியோ
மற்றும்
டோர்ச்
பற்றரிகள்



மீள் மின்னேற்றககூடிய
உறையுடைய
லீட்அஸிட் கொண்ட
பற்றரிகள் UPS மற்றும்,
வீட்டு மின்பாவனைக்கு



பற்றரிகள் மற்றும்
பட்டன் கலங்கள்
கெமரா,கைக்கடிகாரம்,
Hearing aids,
கல்குலேட்டர்கள்,
விளையாட்டு
உபகரணங்கள் மற்றும்
ரிமோட் கன்ட்ரோல்கள்



Ni-cd, Ni-MH & Li-ion பற்றரிகள்
மற்றும் பற்றரி தொகுதிகள்
கையடக்க தொலைபேசிகள்,
கோர்ட்லஸ் தொலைபேசிகள்,
லப்டொப்ஸ்,வீடியோ கெமராக்கள்
மற்றும் மின்னியல்
உபகரணங்களுக்கு உகந்தது.

**மக்னட் செல்ஸ் பிரைவெட் லிமிட்டட்.**
பற்றரி உலகில் விசேடமானவர்கள்

பிரதான காரியாலயம்: 07, மாயா அவனியு, கொழும்பு 06. தொலைபேசி: 2591456 .:பக்ஸ்: 2594755
காட்சியறை: லக்கி பிளாசா,செ.அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு 03. தொலைபேசி: 2574675

Sellingway Ads.


# சுன்னாகம் தபாலகத்துக்கு 10 லட்சம் ரூபா செலவில் காணி

வலி.தெற்கு,ஓக.16

நீண்டகாலமாக இயங்கிவரும் சுன்னாகம் தபால் நிலையக் காணியும், கட்டடமும் அதன் உரிமையாளர்களிடமிருந்து தபால் நிலையப் பாவனைக்கென சொந்தமாகக் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளன என சுன்னாகம் தபாலதிபர் ஐ.லோகஞானம் தெரிவித்தார்.

கடந்தமாதம் 16ஆம் திகதி உரிய முறைப்படி காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கனடாவில் இயங்கும் சுன்னாகம் கிராம மக்கள் ஒன்றியம் காணிக்கொள்வனவுக்கென வழங்கிய எட்டரை லட்சம் ரூபாவைப் பயன்படுத்தியும் நலன் விரும்பியான சேது விபுலானந்தா வழங்கிய ஒன்றரை லட்சம் ரூபாவையும் பயன்படுத்தி காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (எ-152)




# மானிப்பாயில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் வாழும் கலைப் பயிற்சி

## இலவச அறிமுக உரை

நாள்: 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி
இடம்: ஹலோக் வீதி, தேசிய சேமிப்பு வங்கி எதிரில், யாழ் வீதி, மானிப்பாய்.

பயிற்சி நாள்கள்: 17.08.2005 முதல் 21.08.2005 வரை
காலையும் மாலையும் 6 மணிமுதல் 8 மணிவரை

மேலும் தொடர்புகளுக்கு: 077 9059549 - 077 9059544

நாவலர் மணிமண்டபம் நல்லூர் கோவிலடியில் அற்புதமான பஜனைகள் மற்றும் தியானம், ஆவணி மாதம் 20,21,27,28 மற்றும் புரட்டாதி 2ஆம் திகதிகளில் மாலை 7 மணிக்கு நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பில் மலருங்கள் — உங்களை உணருங்கள்
அனைவரும் வருக!

www.artofliving.org (38859) www.srisriravishankar.org


## பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தையொட்டி கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளும் நடத்தப் படவுள்ளன. (202)

***

குடத்தனை,ஓக.16

பருத்தித்தறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி செல்வமலர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-78)

## யாழ்ப்பாணக் கல்லூரி வில்லுப்பாட்டில் முதலாமிடம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வில்லுப்பாட்டு அணியினர் அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற மாகாணமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுத் தேசியமட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கிடையில் - மாகாணமட்டத்தில் வெற்றிபெற்ற வில்லுப்பாட்டு அணியினரையும் அதனைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் பாராட்டியுள்ளார்.

2003, 2004ஆம் ஆண்டுகளிலும் மேற்படி கல்லூரியின் வில்லுப்பாட்டு அணியினர் தேசியமட்டத் தமிழ்த்தினப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றமை தெரிந்ததே. (எ-175)

## யோகாசனப் பயிற்சி வகுப்பு

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையின் ஆதரவில் ஆண், பெண் இருபாலாருக்குமான யோகாசனப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

யோகாசனப் போதனாசிரியர் சிவனேசராஜா இப்பயிற்சிநெறிகளை வழங்கவுள்ளார். பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் மன்ற அறநெறிப் பாடசாலையில் தமது பெயர்களைப் பதிவுசெய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-111)

## 3 குளங்கள் புனரமைப்பு

காரைநகர்,ஓக.16

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மூன்று குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை காரைநகர் கமநல சேவைகள் நிலையம் காரைநகர் பிரதேச விவசாய சம்மேளனங்கள் ஊடாக மேற்கொண்டுவருகின்றது.

காரைநகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிளுவனைக்குளமும் வாய்க்காலும் 7 லட்சத்து 23 ஆயிரம் ரூபா செலவிலும், காரைநகர் தென்மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள நெடுங்குளமும் வாய்க்காலும் 6 லட்சத்து 21ஆயிரம் ரூபா செலவிலும், காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பெரிய குளமும் வாய்க்காலும் 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்யப்பட்டுவருவதாகக் கூறப்பட்டது. (எ-73)


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

# தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்



Rediffusion DYR 497/11/04

## எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 .:பெக்ஸ்: 5352741



கொக்கோகோலா விற்பனையில் 35 வருடகால சேவையில் முன்னணி வகிக்கும்

**NEW BALAKRISHNAN STORES**
164, Manipay Road, Jaffna.
DISTRIBUTORS FOR COCACOLA BEVERAGES
SRI LANKA LTD

**COKE**
**SPRITE**
**FANTA**
**PROTELLO**

1500ml பிளாஸ்ரிக் (மெகா), 300 ml போத்தல் (மீடியம்), 175 ml வடி போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

T.P.: 0777 589608
[பழைய ஈழநாட்டுக்கு அருகில்]
164, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(38771) (24-14-34)

# சிங்களக் கலைஞர்களுக்குக் கிடைக்கும் கௌரவம் நம் கலைஞர்களுக்கு இல்லை!

## அரசுக்கு அக்கறையில்லை, நாமும் கவனிப்பதில்லை ஆதங்கப்படுகின்றார் கவிஞர் இரத்தினதுரை

நல்லூர்,ஓக.16

தென்னிலங்கையில் வாழும் சிங்களக் கலைஞர்கள் மக்களாலும் அரசினாலும் கௌரவிக்கப்படுகின்றனர். எமது கலைஞர்களை நாங்களும்சரி, அரசும்சரி கௌரவிப்பதில்லை.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறினார்.

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையின் ஆதரவில் கலாசாரப் பெருவிழா, பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரன் தலைமையில் இளங்கலைஞர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

சமாதான ஒப்பந்தம் வந்தபோது சிங்களக் கலைஞர்களின் வீடுகளுக்குச் செல்ல அவர்களுடன் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. சிங்களக் கலைஞர்களுக்குத் தலதா மாளிகை செய்து கொடுத்திருக்கும் வசதிகள் சொல்ல முடியாது. நாங்கள் அப்படியல்ல. கறிக்குள் கறிவேப்பிலை போல, ஏதோ எப்போதாவது கலைஞர்களைச் சிந்திக்கின்றோம். கலைஞர்கள் என்று சொல்கின்றோமே தவிர கலைஞர்களுக்கு அவர்களுக்குரிய வாழ்வு கிட்டவில்லை. அரியாலை இரத்தினம் ஒரு மாபெரும் கலைஞர். அந்தக் கலைஞரின் மரணம் பெரிதாகப் பேசப்படவில்லை. நாதஸ்வரச் சக்கரவர்த்தி பத்மநாதனுக்கு ஏற்பட்ட நிலையும் அதுவே. எங்களுக்குரிய கலைஞர்களின் வாழ்வை வழங்கத் தவறிவிட்டோம்.

தமிழ்நாட்டில் 91 வயது வரை வாழ்ந்த ஒரு கலைஞரை அமெரிக்கா அழைத்து, நாட்டுக் கூத்து விரிவுரையாளராக மூன்று வருடங்கள் பணியாற்ற சந்தர்ப்பம் வழங்கியது. தட்சிணாமூர்த்தி நிமிர்ந்து நின்றதால் அவரைத் தேடி வந்தார்கள். கலைஞர்கள் ஒரு வழிந்து போன இனமல்ல. ஆடுவர் பாடுவர் என்று சொலித்துள்ளுவர் என்கிறார் பாரதி.

கலைஞர்களுக்கென ஒரு சம்மேளனம் இது வரை கிடையாது. இன்று எத்தனை நாதஸ்வரக் கலைஞர்கள் இருக்கிறார்கள். இருப்பவர்கள் போய்விட்டால் நாதஸ்வரக் கலைஞர்களே கிடையாத நிலை ஏற்படும். 'பறை' தமிழர்களின் வாத்தியம். இன்று அந்த வாத்தியத்தையே காணமுடியவில்லை. கலைஞர்கள் ஒரு நாளாவது ஒன்று கூடிக் கலந்து சந்தோஷமாக இருந்தார்களா? விடுதலைக்குப் பல பரிமாணங்கள் உண்டு விடுதலை என்பது தனியாக மண்ணுக்கு மட்டுமல்ல.

நல்லூர் பிரதேசம் நல்ல கலைஞர்களைக் கொண்டுள்ளது. இன்று கௌரவம் பெறும் இந்தக் கலைஞர்கள் நாட்டு மக்களின் கௌரவத்திற்கு உரியவர்கள். இவர்களின் கலைத்திறன் நாட்டுக்குரியது. நானும் ஒரு கலைஞன் என்பதால் கலைஞர்களின் சிரமங்கள், கஷ்டங்களை நன்கு அறிவேன். அவர்கள் சுயமாக வாழ்வது கஷ்டம். போர்க்கும் பொன்னாடையும் பட்டமும்தான் அவர்களுக்குக் கிடைக்கிறது. ஊர் கூடித் தேர் இழுப்பது போல இந்த மண்ணின் கலைஞர்களை வாழும் போதே கௌரவிப்பதுடன் அவர்களின் உணர்வுகளையும் தெரிந்துகொள்வோம் - என்றார்.



### வாழ்க்கையைக் காட்டும் கலைப் படைப்பு

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா பேசும் போது கூறியதாவது:

நான் விரும்பி ரசிக்கும் கலை கவிதை. தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதை இலக்கியக் கலை வடிவம் தொன்மை மிக்கது. சங்கப்புலவர் கள் எப்படி வாழ்ந்தார்கள். தமிழ் மொழியை, தமிழ் சமூகத்தை எப்படிப் பதிவு செய்தார்கள் என்பதெல்லாம் அவர்களின் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளமுடியும். கவிஞன் தன்னை விட அரசனோடும் அரச சபையோடும் எந்தஅளவு பின்னிப்பிணைந்திருந்தான் என்பதை அவனது கவிதையைக் கொண்டு ஊகிக்க லாம். கவிதைக் கலையினூடாக மகிழ்ச்சியாக வாழ்ந்தவர்கள் புலவர்கள். கலைதந்த வாழ்வு தான் நாவுக்கரசரை 'நாம்யார்க்கும் குடியல்லோம்' என்று பாட வைத்தது. அமைச்சராக சேக்கிழார், மாணிக்கவாசகர் ஆகியோர் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை அவர்களது வாழ்க்கை வரலாறுகள் கூறும். கம்பன் தனது இராமாயணத்தில் தன்னை எங்கே காட்டுகின்றான் என்பதைக் காணலாம். வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்பவர் பாரதி. இதுதான் பாரதி. அவர் கவிதையூடாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். கலைஞன் கவிதைகளில் வருவான் கலைகளில் வருவான். கலைப்படைப்புகள் கலைஞனைக் காட்டும். கலைப்படைப்புகள் வாழ்க்கையைக் காட்டும் என்றார்.

### குறைவான விண்ணப்பங்களே கிடைக்கின்றன

மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பேசும் போது:

கலைஞர்கள் பலர் தமக்குரிய கௌரவம் கிடைக்காத நிலையில் கலைத்திறனை வெளியிட முடியாது. வறுமையில் வாழுகின்றார்கள் சிலர் அமரராகிவிட்டார்கள். கலைஞர்களைக் கௌரவிப்பதற்கான வாய்ப்புகள் இதுபோன்ற விழாக்கள் மூலம் இடம்பெறுகின்றது. அரச நிதி மிகவும் குறைவாகவே விழாக்களுக்குக் கிடைக்கிறது. எனவே, மக்களின் உதவிகள் தேவையாக இருக்கின்றது. கலாபூஷண விருதைப் பொறுத்தவரை ஒரு சிலருக்குத்தான் கிடைக்கிறது. அந்த விருதுகளைப் பெறுவதற்கான விண்ணப்பங்களைத் தேடி அலைய வேண்டிய நிலையில் கலைஞர்கள் இருக்கிறார்கள். விருதுகள், நிதி தொடர்பாக கலாசார பணிப்பாளரிடம் பேசியிருக்கின்றோம். நிறைய கலைஞர்கள் இருந்தபோதும் கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் குறைவாகவே அனுப்பப்படுகின்றன. கலைஞர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும். சைவமும் தமிழும் வளர்ந்த நல்லூர் பிரதேசம் வரலாற்றுப் பெருமை நிறைந்தது. கலைஞர் தொடர்பாக ஆற்றக்கூடிய பணிகள்பல உண்டு. அதுகுறித்துச் சிந்திக்க வேண்டிய நிலையை இந்தக் கலாசார விழா ஏற்படுத்தியுள்ளது - என்றார்.

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த துறைசார் கலைஞர்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டனர்.

(ப-111-204)

## எவ்வளவுதான் எடுத்துக்கூறினாலும் சிங்களதேசம் புரிந்து கொள்கிறதில்லை!

### தமிழர் நிலைமை பற்றி தென்மராட்சி பொதுஅமைப்புகள் ஒன்றியத்தலைவர் கவலை

சிங்கள தேசத்திற்கு தமிழ் மக்களின் உணர்வுகளையும் சிந்தனைகளையும் எவ்வளவு எடுத்துக் கூறினாலும் அவர்கள் புரிந்து கொள்கிறார்களில்லை. எம் மீது யுத்தத்தைத் திணிக்கும் செயலிலேயே ஈடுபட்டுக்கொண்டிக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்துவது சர்வதேச சமூகத்தின் பொறுப்பு.

மேற்கண்டவாறு தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் ந.அருந்தவபாலன் தெரிவித்தார்.

இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி




கலையரங்கில் யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம் பெற்றது.

இதில் தொடர்ந்து உரையாற்றிய ந.அருந்தவபாலன் கூறியதாவது:

சிங்கள தேசத்திற்கு பல தடவைகள் தமிழ் மக்களுடைய உணர்வுகள், சிந்தனைகளை வெளிப்படுத்திக்காட்டியுள்ளோம். ஆனால் அவர்கள் இதனை உணர்ந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளவும் இல்லை.

இந் நிலைமையில் எம் மீது மீண்டும் ஒரு யுத்தத்தை வலிந்து திணிக்கும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. இதனை நாம் சர்வதேசத்திற்கு உணர்த்த வேண்டிய தேவையும் அவசியமும் எங்களுக்கு இருக்கின்றது.

அந்த வகையில் அதனை உணரச் செய்ய நாம் அனைவரும் வீதியில் இறங்கிப் போராட வேண்டும். நாம் அனைவரும் கடந்த காலங்களைப் போன்று இருக்காது அனைவரும் ஒன்றிணைந்து இதற்காகச் செயற்படவேண்டும். அதன் அடிப்படையில் குறைந்தது நான்கு லட்சம் மக்களாவது வீதியில் இறங்கி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இதன் மூலம் உண்மையான தமிழ் மக்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதுடன் சர்வதேசத்தையும் உணரவும் புரியவும் செய்யமுடியும். இதன் மூலம் சிங்களதேசம் வலிந்து எங்கள் மீது திணிக்கும் யுத்தத்தை தவிர்க்கும் பொறுப்பு சர்வதேசத்திற்கு உரியது - என்று கூறினார்.

சொலமன் சூ.சிறில் உரையாற்றும்போது:

பொது அமைப்பு விடயத்தில் கூட 'அரசு முழுமையான மனத்துடன் செயல்படவில்லை.' ஒரு கையால் கொடுத்து மறு கையால் பறித்த நிலைமையே இங்கு இடம்பெற்றுள்ளது. அதன் ஒரு செயற்பாடே பொதுக்கட்டமைப்புச் சம்பந்தமாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

இதே போன்று எந்தவொரு சிங்கள அரச தலைமைகளும் எமது பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்தால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், சுதந்திரக் கட்சிமுன்னெடுத்தால் ஐக்கிய தேசியக் கட்சியும் என்ற நிலைமையுடன் மக்கள் விடுதலை முன்னணி, ஹெலஉறுமய, சிங்கள உறுமய என தென்னிலங்கையில் தமிழர்களின் உரிமைகளுக்கு எதிரான அமைப்புக்களே அதிகரித்துச் செல்கின்றன.

பொதுக்கட்டமைப்புக்கான தலைமைப் பீடம் கிளிநொச்சியில் அமைய வேண்டும் எனவும், நிதிப்பயன்பாடு சம்பந்தமாக அமைக்கப்படும் குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்ட சிறுவிடயத்தைக் கூட ஏற்கும் நிலையில் அரசு இல்லை. இவற்றை நீதிமன்ற மும்கூட புறம் தள்ளியே தீர்ப்பு வழங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

(ப-86-7-204)

## ஒழுக்கமுள்ள சமுதாயத்தை ஆசிரியர்களே உருவாக்கமுடியும்

### யாழ்.கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்



எதிர்கால நன்மக்களை உருவாக்க அடித்தளமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான். உங் களால்தான் நல்ல ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

எதிர்கால மக்களை உருவாக்கும் பொறுப்பு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களிடமே உள்ளது.

- இவ்வாறு யாழ்.கல்வி வலயத்தின் முன்னாள் ஆரம்பக்கல்வி, உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்தின் தமிழ்விழா அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் வித்தியாலயத்தின் ஜேறோம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தின் உதவிப் பங்குத் தந்தை அருட்திரு. ம.கான்ஸ் போவர் அடிகளார் கலந்துகொண்டார். ஆலய பங்குத்தந்தை அருட்திரு. இ.ம.பயஸ் அடிகளார் ஆசியுரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திருமதி கமலா சுப்பிரமணியம் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவரும் புதியகல்விச் சீர்திருத்தங்களை மாணவர்களுக்கு புகட்டுவதற்காக அதற்கேற்ப தங்களை மாற்றி வருகிறார்கள். நடை, உடை பாவனை யாவற்றிலும் தங்களை மாற்றியுள்ளார்கள்.

ஒவ்வொரு பிள்ளையிடமும் என்ன திறமையுள்ளதோ அதனைக் கண்டுபிடித்து அதனைக் கற்பிப்பதுதான் கல்வியாகும். புகழுக்காக கல்வி அல்ல. ஒரு நாட்டில் நல்லதொரு சமுதாயம் வளர உதவுவதுதான் கல்வி.

இலக்கியத்தை இலக்கிய ரசனையோடு கற்பிக்கவேண்டும். வருங்கால மாணவர்களை நாட்டினது நற்பிரஜைகளாக ஆக்குவதுதான் எமது கடமையாகும். தமிழ் மொழியை வளர்த்தெடுக்கவேண்டியது ஒவ்வோர் ஆசிரியரதும் அரும்பணியாகும்.

எமது பண்பாடு, மொழி அழகானது என்று கூறிக்கொண்டால் மட்டும் போதாது.

மேல்நாட்டை பார்த்து நாம் எமது பண்பாடு மொழியை அழிக்கிறோம். மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கிவிடாது எங்களுடைய தமிழை அழியவிடாது காப்பாற்றுவதுதான் இன்றைய நன்னாளில் நாங்கள் எடுக்கவேண்டிய உறுதியாகும்.


நாங்கள் மேடையில் ஏறி வாயால் பேசுவது தமிழ்மொழியினது - விழாவினது நோக்கம்அல்ல. தமிழை நாங்கள் வளர்த்தெ டுக்க என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லி நாங்கள் தீர்மானம் எடுக்கவேண்டும். அதனை அழியவிடக்கூடாது.

அன்பான பெற்றோர்களே, எமது தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறு எமது கலாசாரத்துக்கு ஏற்றவாறு நாங்கள் எமது குழந்தைச் செல்வங்களை வளர்க்கவேண்டும். எனவே ஆசிரியர்களாகிய நாம் அந்தக் குழந்தைகளுக்கு நல்லவற்றை ஊட்டவேண்டும். ஆசிரியர்களிடம்தான் வருங்காலத் தமிழுடைய வளர்ச்சி உள்ளது. எனவே, இந்தக் குழந்தைச் செல்வங்களுக்கு நல்ல அழகிய முறையில் தமிழை ஊட்டவேண்டும். இயல், இசை, நாடகத்தை வளர்க்கவேண்டும். எங்களுடைய பண்பாடு கலாசாரம் அழியவிடாது காப்பாற்ற வேண்டும்.

(ப-204)

## வீடுகட்ட வழங்கப்படும் பணத்தை வேறுவகையில் செலவு செய்யாதீர்!

### வலி.மேற்கு வீடமைப்புத்திட்ட பயனாளிகளுக்கு அறிவுரை



வலி.மேற்கு,ஓக.16

வீட்டு வேலைகளை உடனடியாக ஆரம்பித்து மூன்று மாதகாலத்துக்குள் பூரணப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும் இன்று உங்களுக்குக் கையளிக்கப்பட்ட இந்தப் பணம் வீட்டுத் தேவைகளுக்குச் செலவழிக்கப்படாமல் வீட்டைக் கட்டுவதற்குச் செலவழிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் உலக வீடமைப்புத் திட்ட காசோலை வழங்கும் நிகழ்வில் குறிப்பிட்டார்.

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உலக வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட 70 பயனாளிகளுக்கும் முதலாம் கட்டக் கொடுப்பனவுக்குரிய 50 ஆயிரம் ரூபாவிற்கான காசோலை - அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வு அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி பா.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-,

எமது பிரிவில் ஆரம்பத்தில் வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் முழுமையாகக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வீடுகளை கட்டிமுடிக்க வேண்டும். இதன் மூலம் தொடர்ந்து எமது பிரதேசத்திலுள்ள ஏனைய வறிய மக்களுக்கும் உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த முடியும். தொழில்நுட்ப அலுவலர்களின் முழுமையான ஆலோசனைகளைப் பெற்று வீடமைப்புக்கான கட்டட வேலைகளை ஆரம்பிக்கவேண்டும். பிரதேச சபையினரின் அனுமதியுடனும் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனையுடனும் மலசலகூடத்தை அமைக்கவேண்டும். எந்தவிதமான பிரச்சினையும் பின்னர் வராதமுறையில் உங்களுடைய வீடமைப்புக்கான அடிக்கல் மிக விரைவில் நாட்டப்பட்டு மழைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வீட்டுக் கட்டடம் பூரணப்படுத்தப்படவேண்டும். வீடமைப்புக் கட்டடத்துக்கு உங்களின் முழுமையான மனித வலு இருக்கவேண்டும். இதன் மூலமே குறிப்பிட்ட கால எல்லைக்குள் வீட்டைப் பூரணப் படுத்தமுடியும் - என்றார்.

(ப-175-204)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்
கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது
**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776627373. (38644) (14.34.29)

## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.
T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)
தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மதுரை மீனாட்சி அம்மன்
### அருள்வாக்கும் ஜோதிடமும்
K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி
இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கபோகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். (காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)
தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38376) (54-34-18)


## மணிக்காவில் குளம் புனரமைப்பு

வரணி, ஓக.16

உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் மணிக்காவில் குளம் புனரமைக்கப்படவுள்ளது.

கமநல சேவைத் திணைக்களம், சாவகச்சேரி கமநல கேந்திர நிலையத்தினூடாக இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-170)

## 15ஆம் ஆண்டு நினைவில்.....



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 25 - 06 - 1971 | 16 - 08 - 1990 |

### பரராஜசிங்கம் சுதன்

பத்து மாதங்கள் சுமந்து பகலிரவாய்
பக்குவமாய் உனை வளர்க்க
பொறுக்க முடியாத காலனவனும்
பொமர் வடிவில் கவர்ந்தானே!

உன் ஆத்மா சாந்திக்காக விழிநீர் சொரிந்து அஞ்சலித்து நிற்கும்.

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

அக்கம்மா, தம்பிமார்,
அம்மம்மா
மற்றும் உறவினர்.

(38889)(22-26-14-34)

## ஈராண்டு நினைவஞ்சலி



செல்வி
### நிஷாளினி குணரத்தினம்
(ஷாளிக் குட்டி)
திதி: பூர்வபக்க ஏகாதசி
16-08-2005

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1993 - 07 - 14 | 2003 - 08 - 08 |


*காத்திருந்தோம் ஏங்கித் தவித்திருந்தோம்*
*ஈராண்டு காலமாக*
*சோக காவியத்தின் நாயகியே!*
*ஷாளிக் குட்டி!*
*உன் நினைவலைகள் எம்மனதினில்*
*சிக்குண்டு தவிக்குதம்மா!*
*வந்தெமது துன்பத்துயர் துடைக்க*
*நிஷாளினியாய் வாருமம்மா!*
*மீண்டும் எனது மகளாய் ஷாளி*
*எப்போ பிறப்பாயம்மா!*
*உமது ஆத்மா சாந்தி அடையட்டும்.*

*பாடசாலை வீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

த.குணரத்தினம்
குடும்பத்தினர்.

(38681)(26-14-34)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 27 ⁂ 11 ⁂ 1972 | 16 ⁂ 08 ⁂ 2003 |

### அமரர் சின்னத்துரை மகேசன்

ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம்மிதயம் அன்பு மகேசனே!
எப்போதும் உங்கள் திருமுகந்தான் தெரிகிறதே!
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

*கோண்டாவில் கிழக்கு.* சி.சிவநேசன் சகோதரன்.

(38875)(26.14.34)

## பொலீஸ் நிலையத்தில் புதிய காவலரண் அமைப்பு

கரவெட்டி,ஓக.16

நெல்லியடிப் பொலீஸார் புதிதாகப் பாதுகாப்பு அரண் ஒன்றை அமைத்துள்ளனர்.

மேற்படி பொலீஸ் நிலையத்தின் வடக்குப் பிரதான வீதியோரமாக சுமார் 20 அடி உயரமானதாக இந்தப் பாதுகாப்பரண் அமைக்கப்பட்டுள்ளது. (எ-70)

## ஊர்காவற்றுறையில் கள் விலை உயர்வு

குருநகர், ஓக.16

ஊர்காவற்றுறைப் பகுதியில் கள்ளின் விலை உயர்வடைந்துள்ளது.

இங்குள்ள கள்ளுத் தவறணைகளில் பனம் கள் ஒரு போத்தல் ரூபா 25 ஆகவும் தென்னம் கள் ஒரு போத்தல் ரூபா 30 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வு கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (எ-51)

## நுளம்பு வலை விநியோகம்

வரணி, ஓக.16

மாசேரி, வரணி வடக்குப் பிரதேச குடியிருப்பாளர்களுக்கு அண்மையில் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரியில் வைத்து இந்த நுளம்பு வலைகளை விநியோகித்தனர். (எ-170)

## வெளிவாரிப் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகின் கலைமுதற் தேர்வு (2002-2003) மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன.

கட்டம் 1 எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலுள்ள பரீட்சை மண்டபங்களில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டம் 2 அடுத்த மாதம் 10,11 ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், யாழ்.பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

கட்டம் 3 அடுத்த மாதம் 17 ஆம் திகதி ஈ.எஸ்.எல். 1.0 ஆங்கிலப்பரீட்சை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் நடைபெறும்.

நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும், யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டது. (202)

## நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கக் கோரிக்கை

காரைநகர்,ஓக.16

காரைநகர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலாளர் ஏ.தில்லையம்பலவாணர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைநகர் அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த வாரம் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடம் அபிவிருத்திச்சபைச் செயலாளர் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஏனைய பிரதேசங்களில் இருந்தும்கூட இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் பெருமளவில் வருகைதந்தனர். ஆனால், இன்று நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாமையால் இப்பிரதேசத்தில் உள்ளவர்களே முழுமையாகச் சிகிச்சை பெறமுடியாமல் வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-73)

## குருநகரில் பரவலாக நுளம்புத் தொல்லை

குருநகர் பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது என இப்பகுதிக் குடியிருப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இங்குள்ள வடிகால்கள் சீராகச் சுத்தம் செய்யப்படாமையும், வடிகால்களில் தேங்கியுள்ள குப்பைகள் வீதியோரங்களில் குவிக்கப்படுவதுமே நுளம்புகள் பெருக்கமடைவதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இரவு நேரங்களில் படையெடுத்துவரும் இந்த நுளம்புகளில் இருந்து தப்புவதற்கு நுளம்புச் சுருள்களைப் பயன்படுத்தியும் நுளம்புகளின் தொல்லை குறையவில்லை என்றும் - இரவு நேர வெப்பம் காரணமாக நுளம்பு வலைகளைக்கூடப் பாவிக்க முடியாதுள்ளது என்றும் கூறப்பட்டது.

நுளம்புகளை ஒழிப்பதற்கு யாழ்.மலேரியாத் தடைப்பிரிவினர் இக்காலப் பகுதியில் வருடாவருடம் மேற்கொள்ளும் நுளம்புப் புகை இம்முறை இதுவரை வடிகால்களில் விசிறப்படாமையும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஒரு காரணம் என்றும் வெபாதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-51)


## BBS ஆகஸ்ட் 19 தொடக்கம் மானிப்பாய் ஆலடிச்சந்தியில்....

ஆங்கிலம் முற்றாகத் தெரியாத வளர்ந்தோருக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி
காலம் 6 மாதம்

ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை பாட விதானங்கள்
PLAY GROUP [2+ முதல் 3+ வரை]
MONTESSORI SCHOOL [3+ முதல் 4+ வரை]
PRE-SCHOOL [4+ முதல் 5+ வரை]
விசேட அம்சங்கள்
- ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை
- தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்
5+ to 14+ சிறார்களுக்கு
- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

Year 1-5 English Medium
Week End Classes நடாத்தப்படும்.
மேற்கூறப்பட்டயாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.

- Diploma in English
- Certificate in English
- IELTS

PRE - FOUNDATION
ஆங்கிலம் முற்றாக தெரியாத 5 வய்து தொடக்கம் 8வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி காலம் 6 மாதம்

BRITISH BUSINESS SCHOOL
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First



# அமைதி வழியில் உரிமை கிடைக்காவிட்டால் ஆயுதப் போரை மீண்டும் தொடங்குவோம்!

## மக்களைத் தயாராகுமாறு கோருகிறது எழுச்சிப் பேரவை

மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக எமக்கான தன்னாட்சி உரிமையை சிறீலங்கா அரசு தரமறுத்தால் மீண்டும் ஒரு யுத்தத்தினூடாக அதனைப் பெற்றுக்கொள்ள இராணுவ ரீதியாக எமது மக்கள் அனைவரும் தயாராகவேண்டும்.

- இவ்வாறு விசுவமடுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை அறை கூவல் விடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பேரவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசின் இனவாதப் போக்கையும், அடக்கு முறையையும், எதிர்த்து மேன்முறை ரீதியான போராட்டம் எமது தமிழ்த் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டது. அன்றைய காலத்தில் அனைவரும் ஒன்று திரண்ட சக்தியாக ஒருமித்த குரலில் போராடத் தவறியமையால், அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறிலங்காவின் அன்றைய இனவாத அரசு மிகவும் மூர்க்கத்தனமான செயற்பாடுகளைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்தது.

எனவே, அன்றைய அந்த தமிழ்த் தலைவர்களின் போராட்டத்தின் நிதர்சனமாக எமது தலைவர் ஆயுத ரீதியாகப் போராட்டத்தை ஆரம்பித்தார். அதன் படிமுறை வளர்ச்சியாகப் பரிணாமம் பெற்றுப் பல தியாகங்கள் புரிந்து, இன்று முடிவின் கட்டத்தில் எல்லாவற்றுக்கும் தயாரான பலத்தோடு நின்று கொண்டுதான் சிறிலங்கா அரசோடு சர்வதேசத்தின் அனுசரணையுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

இதனால் ஏற்பட்டிருக்கும், இந்தச் சமாதான காலத்தைப் பயன்படுத்திப் பலதீய சக்திகள் எமது விடுதலைப் போராட்டத்தை அழித்து அல்லது, நசுக்கி இந்தப் போராட்டத்தில் இருந்து மக்களைப் பிரித்துத் தங்களுடைய பெரும்பான்மையை நிறுவித் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்த முயல்கின்றன.

ஆகையால், இதனை ஏற்றுக்கொள்ள எமது சமூகம், தமிழ் மக்கள் தயாராக இல்லை. எமது மண்ணைப் பாரம்பரியமாக ஆண்டவர் நாம். எமது மண்ணை நாமே ஆள வேண்டும் என்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து சரியான ஓர் அடித்தளத்தை இட்டு இப்போராட்டத்தை முன் நகர்த்திச் செல்லுகிறார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

எனவே, எமது உரிமையை எவ் வழியில் பெற்றுக்கொள்ள வேண்டுமோ அவ்வழியால் பெற்றுக்கொள்ளத் தமிழர்களாகிய நாம் தயாராகிவிட்டோம். இதன் வெளிப்பாட்டைச் சர்வதேச உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இதனால் வரும் நாள்களில் மேற் கொள்ளப்பட இருக்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் அனைத்து மக்களும் கலந்துகொள்வதோடு, இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் ஊடாக எமக்கான தன்னாட்சி உரிமையைச் சிறிலங்கா அரசு தரமறுத்தால் மீண்டும் ஒரு யுத்தத்தினூடாக அதனைப் பெற்றுக்கொள்ள இராணுவ ரீதியாக எமது மக்கள் அனைவரும் தயாராக வேண்டும்.

இராணுவ ரீதியான பயிற்சிகளைப் பெற்று விடுதலைப்புலிகளின் பின்னால் அனைவரும் அணிதிரண்டு எம்மை எதிர்க்கின்றவர்களை அழிப்போம், அடிமைப்பட்ட தமிழினத்தைத் தலைநிமிரவைத்த எம் தலைவா! உரிமையை வென்றெடுக்கும் புனிதப் போரை உடன் தொடங்குங்கள்.

இதுவரை பொறுத்தது போதும். சமாதானக் காலத்தில் சாவுக்குள் எம்மினத்தைத் தள்ளிவிடாமல் தலை நிமிர்ந்த தமிழினம் நாம் பொங்கி எழுவோம். தாயகத்தை மீட்டு சரித்திரம் படைப்போம். சந்ததியை வாழ வைப்போம். போர் பயிற்சி பெற்றுக் கொள்ளவும் பாதுகாப்புப் பயிற்சி பெற்றுக்கொள்ளவும் உடன் தயாராகுமாறு விசுவமடுப் பிரதேச அனைத்து மக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது

(த-352)



*கிளிநொச்சி புதுமுறிப்புக் குளக்கட்டு மீது போக்குவரத்துச் செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால், அதனையும் மீறி சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் இக்குளக்கட்டு வழியே பயணிக்கின்றன. இதனால், குளக்கட்டு இடிந்து மோசமான நிலைக்கு வந்திருக்கிறது. இதனைப் படத்தில் காணலாம். (படம்: ஜோ.யுஜேனியன், ஸ்கந்தபுரம் செய்தியாளர்)*

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லை.மாவட்ட மக்களுக்கு உதவி

பரந்தன்,ஓக.16

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 620 விவசாயக் குடும்பங்களுக்கு உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினர் இந்த உதவித் திட்டங்களை வழங்கியுள்ளனர்.

இதில் 620 குடும்பங்களுக்கு விவசாய உதவித் திட்டங்களும், 200 குடும்பங்களுக்கு கோழி வளர்ப்புக்கான உதவிகளும் 300 குடும்பங்களுக்குச் சிறுதானியச் செய்கைக்கான கடன்களும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-352-203)

# துணுக்காய் வலய மாணவருக்கான போட்டி முடிவுகள் வெளியாகின

துணுக்காய்,ஓக.16

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்வி ஆக்கத்திறன், கண்காட்சிப் போட்டி, சமூகக்கல்வி, பொது அறிவுப்போட்டி என்பன அண்மையில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. கண்காட்சிப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**செயற்றிட்டம்** - தே.சன்சியா (பாண்டியன்குளம் ம.வி.), த.பிரசன்னா (பாலிநகர் ம.வி.), அ.அற்புதரூபன் (கல்விளான் அ.த.க. பாட சாலை)

**மாதிரிகள்** - வா.பிருந்தன் (யோகபுரம் ம.வி), வி.ஜெயக்காற் (மாங்குளம் ம.வி.), க.சிவகுமார் (முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பா.).

**ஓவியம்** - அ.அருந்ததி (யோகபுரம் ம.வி.), ம.சுதேசன் (துணுக்காய் அ.த.க.பா.), ரூ.ஜெராட் (கற்சிலைமடு அ.த.க.பா.).

**வரலாற்றுக் குறிப்பு** - க.சுரேந்தினி (கோட்டை கட்டின குளம் அ.த.க.பா.), வ.ஆதவன் (கற்சிலைமடு அ.த.க.பா.), அ.மயூரன் (பாண்டியன்குளம் ம.வி.).

**நவீன தொழில்நுட்பம்** - ந.ரூன்சன் (மாங்குளம் ம.வி.), இ.சிவகரன் (வன்னிவிளாங்குளம் அ.த.க.பா.), த.நிரோஜா (துணுக்காய் அ.த.க.பா.).

இதேவேளை - துணுக்காய் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சமூகக்கல்வி பொது அறிவுப்போட்டி, சமூகக்கல்வி கண்காட்சிப் போட்டி என்பவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரங்களும் வெளியாகியுள்ளன.

சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் 6,7** - செ.ரசியா (பாலிநகர் மகா வித்தி.), ப.கோபுசங்கர் (அனிஞ்யென் குளம் தமிழ் வித்தி.), ம.ஜயந்தினி (திருமுறிகண்டி இ.வித்தி.).

**தரம் 8,9** - வ.ஆதவன் (கற்சிலைமடு அ.த.க.பா.), து.துவாரகா (ஆயாகபுரம் ம.வித்தி.), சு.செந்தூரன் (கற்சிலைமடு அ.த.க.பா.).

**தரம் 12,13** - என்.துளசிதாஸ் (மல்லாவி ம.க.), ந.சங்கர் (மல்லாவி ம.க.), ரூ.அபராஜிதன் (கற்சிலைமடு அ.த.க.பா.).

(த-202)

# கோதுமை மாவில் புழுக்கள்!

ஒட்டிசுட்டான்,ஓக.16

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வர்த்தக நிலையங்களிலும், கூட்டுறவுக் கடைகளிலும் விநியோகிக்கப்படும் கோதுமை மா பாவனைக்கு உகந்ததாக இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிகளவு புழுக்கள் இந்தக் கோதுமை மாவில் காணப்படுகின்றன. இதனைப் பயன்படுத்த மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சுகாதாரத்தைப் பேணுபவர்கள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(352-341-204)

# விசுவமடு மகாவித்தியாலயத்துக்கு நூல் கொள்வனவு செய்ய நிதி

பரந்தன்,ஓக.16

விசுவமடு மகாவித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் நிதியுதவி செய்துள்ளார்.

மேற்படி பாடசாலையில் நூலகம் இருந்தபோதும் மாணவர்களுக்குப் போதியளவு நூல்கள் இல்லை. அவற்றைக் கொள்வனவு செய்வதற்கே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த 10 ஆம் திகதி வழங்கினார்.

(த-352-202)

# புனர்வாழ்வுக்கழக அலுவலகம் கீரிசுட்டானில் திறப்பு

ஒட்டுசுட்டான்,ஓக.16

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதேச அலுவலகம் ஒன்று கீரிசுட்டானில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

போரினாலும் சமூகப் பொருளாதாரக் காரணிகளாலும் பின்தங்கியுள்ள கிராமங்களை மேம்படுத்தும் நோக்கோடு டென்மார்க் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற இந்த அலுவலகத் திறப்பு விழாவில் வவுனியா மாவட்ட நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் விஜயகுமார், வவுனியா வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்திரன், மன்னார் மாவட்ட அணித் தலைவர் செந்தூரன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூர்த்தி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(த-202-341)




# கிளிநொச்சி நகரில் குப்பைகளால் போக்குவரத்துக்கு அசௌகரியம்

பரந்தன்,ஓக.15

கிளிநொச்சி நகரப் பகுதி வீதிகளில், சிதறிப்போய் இருக்கும் கழிவுப் பொருள்களால் மக்கள் பயணஞ் செய்வதற்குப் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீதிகளில், இரவுவேளைகளில் கழிவுப் பொருள்களை எடுத்துச்செல்வோர் உரிய முறையில் அவற்றை எடுத்துச்செல்லாததனால் வீதிகளில் சிந்துகின்றன. இவ்வாறு சிந்தப்படும் கழிவுநீர், கழிவுப் பொருள்களால் நகரில் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால், தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய குழுக்கூட்டத்தில் கரைச்சிப் பிரதேச சபை இதனைக் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

(த-352-204)



*வவுனியா வடக்குப் பகுதியில் குளவிசுட்டான் கிராமத்தினை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். அப்போது படையினர் குடியிருப்புக்களை இடித்து கிராமங்களின் நடுவே பாரிய மண்அணைகளை அமைத்திருந்தனர். மக்களின் குடியிருப்புகளை இடித்துத்தள்ளி அங்கு மண் அணைகள் அமைக்கப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.*

*(படங்கள்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

## கருமாரி அம்மன் ஜோதிடம்



ஸ்ரீ [illegible]கிருஷ்ண சாஸ்திரி

இந்தியா[illegible]லிருந்து வருகைதந்துள்ளார்.



கைரேகை மூ[illegible] - நடந்தவை. நடக்கின்றவை. நடக்கப்போகின்றவை மற்றும் தொழில். வியாபாரம். கல்வி.

கணவன்-மனைவி ஒன்று சேர்தல். வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.No.: 0779233191 (38399)(26.14.19)


## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமைபுரியும்
திருமதி கார்த்திகா சுகந்தன்
(கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்)
அவர்களின் பாசமிகு கணவர்

### அமரர் துவராசா சுகந்தன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும்,
கூட்டுறவு நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்.

(சி-44502)(26-14-19)

## மரண அறிவித்தல்

### திருமதி பூலோகராணி குணரத்தினராஜா
### (வேதநாயகி அல்லது ராணி)

செல்வச்சந்நிதி, தொண்டைமானாற்றை வதிவிடமாகக் கொண்ட திருமதி பூலோகராணி 14.08.2005 ஞாயிற்றுக்கிழமை இல் காலமானார்.

அன்னார் குணரத்தினராஜா ஐயர் (செல்வம் ஐயா) அவர்களின் அன்பு மனைவியும் கஜந்தியின் தாயாரும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்லம்மாவின் அன்பு மருமகளும் இரத்தினலிங்கம், சிறீரஞ்சிதாதேவியின் அன்புச் சகோதரியும் மஞ்சுளாதேவி, சண்முகலிங்கம், இராசேந்திரம் (குட்டி), காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, கோசலாதேவி, துரைராஜா, மாணிக்கவாசகம் ஆகியோரின் மைத்துனியும் உதயராஜன் (ராசன்), திலகராஜன் (ஈசன்) ஆகியோரின் சித்தியும் திரிபுரா, சுகஞ்யா, ராகவன் ஆகியோரின் பெரியதாயாரும் பிரியந், தமிழினி, எழிலரசி, செல்வி ஆகியோரின் மாமியாரும் ஹர்ஷாந்தின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-08-2005) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.குணரத்தினராஜா (கணவர்).
அளவெட்டி மத்தி, அளவெட்டி. (38917)(261419)

# முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சையில் திறமைச் சித்திக்குப் புதிய நிபந்தனைகள்

## தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் தகவல்

வலிகாமம் தெற்கு,ஓக.16

உயர்தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தால் நடத்தப்பட்டுவந்த உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சையில் திறமைச் சித்தி வழங்குவதில் இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் இவ்வாண்டு முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் த.ராஜரட்ணம் தகவல் தருகையில், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளன என்று தெரிவித்தார்.

அதிதிறமைச் சித்திக்கு முதல் மூன்று வருடங்களில் உள்ள 30 பிரதான பாடங்களில் 18 பாடங்களில் 'ஏ' அல்லது 'பி' சித்திகள் பெற்றிருக்கவேண்டும்.

இந்த 'ஏ' அல்லது 'பி' சித்திகள் முதலாம் வருடத்தில் 7 பாடங்களிலும் இரண்டாம் வருடத்தில் 6 பாடங்களிலும் மூன்றாம் வருடத்தில் 5 பாடங்களிலும் என்றவாறு பெற்றிருக்கவேண்டும்.

அத்துடன், விருப்பத்துக்குரிய சகல பாடங்களிலும் 'சி' சித்தி பெற்றிருக்க வேண்டும்.

ஏனைய பாடங்கள் சகலவற்றிலும் 'சி' சித்தியைப் பெற்றிருக்க வேண்டும். சகல பாடங்களிலும் முதல் தடவையிலேயே சித்திகளைப் பெற்றுக்கொண்டிருக்கவேண்டும். திறமைச் சித்திக்கு முதல் மூன்று வருடங்களில் உள்ள 30 பிரதான பாடங்களில் 10 பாடங்களில் 'ஏ' அல்லது 'பி' சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

இப்பத்துப் பாடங்களும், முதலாம் வருடத்தில் 4 பாடங்களிலும், இரண்டாம் வருடத்தில் 3 பாடங்களிலும், மூன்றாம் வருடத்தில் 3 பாடங்களிலும் எனக் குறைந்தது 'ஏ' அல்லது 'பி' சித்திகளைப் பெற்றிருக்கவேண்டும்.

ஏனைய சகல பாடங்களிலும் 'சி' சித்தி பெற்றிருக்கவேண்டும்.

அத்துடன், விருப்பத்துக்குரிய பாடங்கள் எல்லாவற்றிலும் 'சி' சித்தி பெற்றிருக்க வேண்டும்.

சகல பாடங்களிலும் முதல் தடவையிலேயே சித்திகளைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். (9-152)

## திண்மக்கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்வு

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்.உபபிராந்திய அலுவலகம் திண்மக் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்வுகளைப் பிரதேச ரீதியாக நடத்தி வருகின்றது.

சுன்னாகம் சந்தைப் பகுதியில் விழிப்புணர்வு நிகழ்வை நடைமுறைப்படுத்தவும் - வலி.தெற்குப் பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் மேற்படி சந்தையிலுள்ள வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வுக் கூட்டங்களையும் சபையின் யாழ். உபபிராந்திய அலுவலகம் நடத்தவுள்ளது.

சந்தைப் பகுதியில் சிரமதானம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், கழிவகற்றும் பரல்களை வைத்தல், விழிப்பூட்டல், வாசகங்கள் அடங்கிய அறிவுறுத்தல் பலகைகள் வைத்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் இவை அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், யாழ்.உபபிராந்திய அலுவலக உதவிப் பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார் தெரிவித்தார்.

(எ-202-203)

## திருத்தம்

நேற்றைய உதயன் 12ஆம் பக்கத்தில் வெளியான பாராட்டி வாழ்த்துகிறோம் முழுப்பக்க விளம்பரத்தில் -

மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளராக இருந்து தற்போது யாழ்.பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள என்ற வாசகத்தில் -

உதவிப் பொதுமுகாமையாளராக இருந்து என்பது தவறாகும். உதவிப் பிராந்திய முகாமையாளராக என்றே இருந்திருக்கவேண்டும். அதுவே சரியானதாகும். தவறுக்கு வருந்துகிறோம்.

*- விளம்பரதாரர்.*


**HOME FOR RENT**
**ARIYALAI - AVAILABLE**
**SEPTEMBER 1**

LARGE RENOVATED
BUNGALOW, NEAR SITHI VINAYAGAR
TEMPLE, 15 MINUTES TO JAFFNA
TOWN, MODERN FACILITIES IN 10
LARCHAM PROPERTY
IDEAL FOR NGO'S
CONTACT # 021 222 3867.

(38825)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



'சிவஸ்தான்' கொயிலாமனை, கொடிகாமத்தைச் சேர்ந்தவரும் கடந்த முப்பத்தைந்து வருட காலமாக தென்மராட்சியின் பலபகுதிகளிலும் கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான கைதடியைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட

### திரு. இராமலிங்கம் அம்பலவாணர்

அவர்கள் 15.08.2005 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களது முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டதையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை நல்ல முறையில் தொடரவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை மேற்கு. (38911)(26-14-19) திரு.கந்தையா சிவகுமார்.



## First Aid Coordinator பதவி வெற்றிடம்

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி இணைப்பாளர் பதவிக்கு, சேவை மனப்பான்மையுடையோருக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். கீழ்க்காணப்படும் முகவரிக்கு சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும், ஆங்கில மொழியறிவு, முதலுதவி கற்பித்தல் உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொறுப்பதிகாரி,
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் சேவை,
யாழ்.போதனா வைத்தியசாலை,
தொ.பே.இல:0212223166

(38906)(26-14-19)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 07 - 09 - 1921

மறைவு 09 - 08 - 2003

### M.T. திருநாவுக்கரசு

(முன்னாள் பிரபல வர்த்தகரும் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் கலட்டி எச்சாட்டி மஹா மாரியம்மன் அறங்காவல் சபை உறுப்பினரும்)

*திதி: 16-08-2005*

அயராத உழைப்பே நல்வாழ்வைத் தரும் என்பதைச் சொல்லிலும்
செயலிலும் எடுத்துக்காட்டி எங்களை நன்னிலைக்கு
உயர்த்திய தந்தையே!
மறைந்த உங்களை என்றும் மறப்பதில்லை
ஈராண்டு கழிந்தாலும் உங்கள் அருமைத் திருமுகம்
எங்கள் மனக்கண்முன் வருகின்றது - உங்கள்
மணிமொழிகள் எங்கள் காதுகளில் இன்றும்
ஒலிக்கின்றன தங்கள் உடல் மறைந்தாலும்
உங்கள் உயிர் எங்களை வாழ்த்திக்கொண்டிருக்கின்றதை
உணர்கின்றோம்.

*தங்கள் பிரிவால் வாடும்:*
**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தகவல்: தி.இராஜேந்திரன் (மகன்),
201, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (38912)(26-14-19)

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 22 - 04 - 1942

உதிர்வு 19 - 07 - 2005

அமரர்

### திருமதி சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்

எங்கள் குலவிளக்கின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (17.08.2005) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்த நாளில் வைத்தியசேவை வழங்கிய மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து தொலைபேசி அழைப்புகள் மூலமும் தந்திகள் மூலமும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் மலர் வளையங்கள் சாத்தியும் அஞ்சலிசெய்த அன்பு உள்ளங்களுக்கும் மரணச்செய்தி அறிந்து உடன் ஓடிவந்து பலவழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் ஆறுதலும் அளித்து துயர்பகிர்ந்த எமது அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை ஒவ்வொருவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**தகவல்: ஆ.சுந்தரலிங்கம் (கணவர்)**
**85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.021 222 8005.**

**குடும்பத்தினர்.**

# வடக்கு - கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தினர் பயிற்சிகளை வழங்க அங்கீகாரம் கிடைத்தது

## தமிழீழ விளையாட்டுத்துறை - ஸ்ரீலங்கா சம்மேளனச் சந்திப்பில் இணக்கம்



கிளிநொச்சி, ஓக.16

வடக்கு - கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் பயிற்சிகளையும் மத்தியஸ்தர் பயிற்சிகளையும் வழங்குவதற்கு ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விளையாட்டுத்துறையின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தமிழீழ விளையாட்டுத்துறையினருக்கும் ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சம்மேளனத்தினருக்குமிடையிலான சந்திப்பொன்று அண்மையில் மடுவில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, இளையோர் செயற்பாட்டு நிறுவனச்செயலாளர் அன்ரன் அன்பழகன், தமிழீழத் தேசிய தொலைக் காட்சி ஆங்கிலச் செய்திப்பிரிவு இணைப்பாளர் யோகன், இளையோர் செயற்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் விஜி, மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் ஆகியோரும் -

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளத்தின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் மணிலால் பெர்னாண்டோ, ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் திலினா பண்டிதரத்தின, பிரதம நிறைவேற்று அதிகாரி கிருஷாந்த பெரேரா ஆகியோரும் - கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கில் உதைபந்தாட்டத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.



அண்மையில் உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் வீரர்களுக்கு அளிக்கும் பயிற்சிகள் மற்றும் மத்தியஸ்தர்களுக்கு அளிக்கும் பயிற்சிகளை சம்மேளனம் அங்கீகரிக்கும் என்று சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் யாழ்ப்பாணம், மன்னார், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களில் 15 கோடி ரூபா செலவில் மைதானங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்வதற்கு சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் முன்வந்துள்ளது என்றும் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. (3-203)

## 180 ஓட்டங்களால் யாழ்.இந்து வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.16

'அஸ்ரா' கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில்- 15 வயதுப் பிரிவினருக்கான- ஓர் ஆட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை யாழ்.இந்துக் கல்லூரி 180 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களினை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றது.

பிரியதர்சன்,பவசுதன், சுரேஸ்குமார் ஆகியோர் முறையே 96, 83, 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

ராஜ்குமார் 2 விக்கெட்டுக்களையும் மேனன், அஜந்தன், அரவிந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 117 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பிரதிஜன், அஜந்தன் முறையே 31, 25 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

கௌரிநாத் 4 விக்கெட்டுக்களையும், சங்கீதன் 3 விக்கெட்டுக்களையும், டிலான் 2 விக்கெட்டுக்களையும் பிரியதர்சன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

(3-190)



வவுனியாவில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகளில் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மாணவிகளான அன்ரன் சனமையா சாருஜி உயரம் பாய்தலிலும், அன்ரன் டேவிட் கொன்சினிமேரி பரிதி வட்டம் எறிதல் நிகழ்விலும் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகினர்.

இவர்களுக்கான பாராட்டு நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவான மாணவிகளையும் கல்லூரி அதிபர் அருட்சகோதரி றொசாறியோ, உபஅதிபர் அருட்சகோதரி டிலானி, விளையாட்டுப் பொறுப்பாசிரியை திருமதி அ.பாஸ்கரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

## கரப்பந்தாட்டம்

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**இன்று**

- மாலை 4 மணி- இந்து இளைஞர் வி.க.எதிர் அரியாலை ஐக்கியம் வி.க.
- மாலை 5 மணி- ஆவ்ரங்கால் மத்திய வி.க.எதிர் அச்சுவேலி தோப்பு வி.க.

**நாளை**

- மாலை 4 மணி- அச்சுவேலி விக்கினேஸ்வர வி.க. எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.
- மாலை 5 மணி- கே.கே.எஸ்.ஐக்கிய வி.க. எதிர் மல்லாகம் சிறிமுருகன் வி.க.(3-190)

## யாழ்.மாவட்டம் மாகாணச் சம்பியன்

### மேலும் 2 சாதனைகள் படைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் கூடுதல் புள்ளி பெற்று யாழ்.மாவட்டம் மாகாணச் சம்பியனாகியது.

மாகாண மட்டத்திலான விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பெருவிளையாட்டுகள் பூர்த்தியாகி, தடகளப் போட்டிகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

வடக்கு - கிழக்கில் எட்டு மாவட்டங்களில் இருந்து 500 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் உணர்வு பூர்வமாக பங்கேற்றனர்.

தடகளப் போட்டிகளில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் திருகோணமலை மாவட்டம் கூடுதல் புள்ளிகளைப் பெற்றது.

இப்போட்டிகளில் மாவட்டங்கள் பெற்ற புள்ளி விவரங்கள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு** - திருகோணமலை 45 புள்ளிகள், மன்னார் - 44 புள்ளிகள், யாழ்ப்பாணம் - 33 புள்ளிகள், அம்பாறை - 16 புள்ளிகள், வவுனியா - 13 புள்ளிகள், மட்டக்களப்பு - 11 புள்ளிகள், முல்லைத்தீவு- 08 புள்ளிகள், கிளிநொச்சி - 06 புள்ளிகள்.

**பெண்கள் பிரிவு** - திருகோணமலை - 56 புள்ளிகள், யாழ்ப்பாணம் - 54 புள்ளிகள், வவுனியா - 16 புள்ளிகள், கிளிநொச்சி - 13 புள்ளிகள், அம்பாறை - 07 புள்ளிகள், மட்டக்களப்பு - 06 புள்ளிகள், மன்னார் - 14 புள்ளிகள்.

தடகள மற்றும் பெரு விளையாட்டுக்களில் மாவட்டங்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு:-

- யாழ்ப்பாணம் - 141 புள்ளிகள்.
- திருகோணமலை - 85 புள்ளிகள்.
- மட்டக்களப்பு - 82 புள்ளிகள்.
- வவுனியா - 66 1/2புள்ளிகள்.
- மன்னார் - 63 புள்ளிகள்.
- அம்பாறை - 16 புள்ளிகள்.
- முல்லைத்தீவு - 9 1/2 புள்ளிகள்.
- கிளிநொச்சி - 7புள்ளிகள்.

ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக (சுவட்டு நிகழ்வு) திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரசன்னாவும் -

பெண்கள் பிரிவில் - சிறந்த தடகள வீராங்கனையாக (சுவட்டுநிகழ்வு) யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த என்.ஜெசிவித்தியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

2005 ஆம் ஆண்டு மாகாண மட்ட தடகளப் போட்டியில் சிறந்த வீரனாக திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரதீசன் தெரிவுசெய்யப்பட்டார்.

முதலாவது நாளில் 4 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. இரண்டாவது நாளில் 2 சாதனைகள் புரியப்பட்டுள்ளன.

அச்சாதனைகள் வருமாறு:-

பெண்களுக்கான ஈட்டியெறிதல் நிகழ்வில் 2002 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கே.மனோறூபி 30.31 மீற்றர் தூரத்தினை எறிந்து நிகழ்த்திய சாதனையை, 3 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தாரணி 33.19 மீற்றர் தூரத்தினை எறிந்து முறியடித்தார்.

ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ரதீசன் 2003 ஆம் ஆண்டு 3.50 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து நிலை நாட்டிய சாதனையை இரண்டு வருடங்களின் பின்னர் 3.51 மீற்றர் உயரத்தினைப் பாய்ந்து முறியடித்துள்ளார்.

இறுதிநாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.மோகனதாஸும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விளையாட்டுத்துறையின் இணைப்பாளர் இன்பனும் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

(3-190)

## விளையாட்டு

### பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக.16

யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் 11,13,15, 17,19 வயதிற்கு உட்பட்டோருக்கான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை அடுத்தமாதம் 17 ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நடத்தவுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்பும் போட்டியாளர்கள், யாழ்.மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் மோகனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (3-190)

## மகாஜனாவை வென்றது சென்றல்

வலி.வடக்கு,ஓக.16

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான இரண்டாம் சுற்று கிரிக்கெட் போட்டியொன்றில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையேயான போட்டி மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது.

கஜதீபன், செந்தூரன் ஆகியோர் தலா 9 ஓட்டங்களையும் பிரதாபன் 6 ஓட்டங்களையும் தமது அணிக்கான ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

மயூரன் 6 விக்கெட்டுக்களையும் கோபிகன் 3 விக்கெட்டுக்களையும் சிவகரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 251 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

சிவகரன் 86 ஓட்டங்களையும் ஜேம்ஸ் ஜான்சன் 42 ஓட்டங்களையும் மயூரன் 25 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கஜதீபன், அமிர்தாஜன், ஜபாகர் ஆகியோர் முறையே 4, 3, 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 8 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

புவிதரன் 21 ஓட்டங்களையும் அமிர்தாஜன், பிர தாபன் ஆகியோர் தலா 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய தனுஜன், மயூரன் ஆகியோர் முறையே 6,1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(3-86)

## ரெனிஸ் சுற்றுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.16

லூர்த்தர் செல்வராஜா ஞாபகார்த்தமாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மாவட்டமட்டத்தில் நடத்தப்பட்ட ரெனிஸ் சுற்றுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களின் விவரம் வருமாறு:

**தனியாட்டம்:-** இராஜேந்திரா ரமேஷ், ஆர்.ரிக்கேஸ்.

**இரட்டையர் ஆட்டம்:-** பி.எல்.மோகன் மற்றும் ஆர்.ரமேஸ், என்.ரமேஸ் மற்றும் எஸ்.சிவபிரசன்னா.

*18 வயதுப் பிரிவு*

**தனியாட்டம்:-** விமலேந்திரன் ஜெயாஸ் செகான், வை.தயாளன்.


**இரட்டையர் ஆட்டம்:-** விமலேந்திரன் ஜெயாஸ் செகான் மற்றும் கே.டிசான், ஜெ.ஏ. ஜெராட் மற்றும் ஆர்.ரவீந்திரகுமார்.

*15 வயதுப்பிரிவு*

**தனியாட்டம்:-** ஜெ.ஆர்.துஷியந்தன், என்.சாய்லன்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி லூர்த்தர் செல்வராசா வழங்கினார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி ரெனிஸ் கிளப் தலைவர் ஏ.ஜெயராசா, செயலாளர் வண.ஜி.நடராஜா ஆகியோர் கருத்துரை வழங்கினர். (ஓ-185-203)




வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த கடற்றொழிலாளர்களுக்கு ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் அனுசரணையுடன் 'பாக்' நிறுவனம் படகுகள் மற்றும் வலைகளை வழங்கியது. இதற்கான நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை குடத்தனை வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமராட்சிக் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் மங்கள விளக்கேற்றுவதையும், 'பாக்' நிறுவனத்தின் பசுபிக் - ஆசிய மூலவள நிலைய திட்ட முகாமையாளர் செல்வி மெனாலி அயாகோ படகுகளை வழங்குவதையும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிமனைப் பணிப்பாளர் சு.பாலையாவும் 'பாக்' நிறுவனத் திட்ட அலுவலர் நியோ ஆகியோர் வலைகளை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சி.சுந்தரலிங்கம்)

## ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியைப் பயன்படுத்தாத

# பல அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க அரசு முஸ்தீபு

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கும், அது தொடர்பான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்குமென கோடிக் கணக்கில் உதவி நிதியைப் பெற்றுக்கொண்டு நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள அரசு தயாராகி வருகிறது. இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர், உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமக்கு அனுமதி வழங்குமாறு அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தன. நிவாரணச் செயற்பாடுகளுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களில் நிவாரணப் பணியை ஆரம்பிக்க இன்றுவரை முயற்சிகளைக் கூட மேற்கொள்ளவில்லை.

60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச ரீதியில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. 15 ஆயிரம் நிரந்தர வசிப்பிடங்களை அமைத்துக்கொடுக்கவும் , பாட சாலைகள் மற்றும் மருத்துவமனைகள் சில வற்றையும் புனரமைக்கவும்அந்த நிறுவனம் ஒப்புக்கொண்டது. ஆனால் நீண்டகால தாமதத்தின் பின்னர் அவற்றுள் ஒரு சில செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஏற்பட்டஆழிப்பேரலை இழப்புக்கள் சீர் செய்யப்படுவதற்காக பிரிட்டிஷ் மக்கள் அன்பளிப்பாக 60 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தனர். அந்நிதி வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது.

அந்த நிறுவனம் எதுவிதமான புனரமைப்புப் பணிகளையும் இன்னமும் பெரிய அளவில் ஆரம்பிக்கவில்லையென ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து கிடைத்துள்ள தகவல்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பான பேச்சுக்களுக்கு வருமாறு பலதடவைகள் அரசு அழைப்பு விடுத்துள்ளபோதும், அந் நிறுவனத்தின் பிரதிநிதிகள் சமூகம் தரவில்லை. ஜனாதிபதியினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேச்சு வார்த்தையொன்றில் மாத்திரமே அந்நிறுவனம் பங்கேற்றிருந்தது.

இதேவேளை மற்றொரு அரசசார்பற்ற சர்வதேச நிறுவனம் 20 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட நிதியைச் சேகரித்துள்ளதாக ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்குத் தெரிவித்துள்ளது.

50 ஆயிரம் நிரந்தர வசிப்பிடங்களை அமைத்துக்கொடுப்பது, பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் சிலவற்றைப் புனரமைத்தக் கொடுப்பது தொடர்பாக அரசுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட இந் நிறுவனம் பெரிதும் அவசரப்பட்டது. ஆயினும், அரசு பலதடவைகள் இது தொடர்பாக சுட்டிக் காட்டியும் கூட எந்தவொரு பணியும் குறிப்பிடத்தக்கதாக ஆரம்பிக்கப்படவில்லை. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் சேகரித்துக் கொண்டுள்ள நிதியை வங்கிகளில் வைப்பிலிட்டு வட்டியைப் பெற்று வருவதாக அரசுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சர்வதேச ரீதியில் செயல்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவோ அல்லது கண்காணிக்கவோ இலங்கையில் சட்டபூர்வமான வசதிகள் இல்லை. ஆழிப்பேரலை உதவித் திட்டங்களுக்காக திரட்டப்பட்ட நிதி தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கும் சில சட்டவிதிகளை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந் நடவடிக்கை செயல்படுத்தப்படும் முன்னரே, ஒரு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் ஊடாகவும் சர்வதேச இணையத்தளங்கள் ஊடாகவும் அரசே தவறாகச் செயற்படுவதாக பொய்யான தகவல்களை வெளியிட்டு வருகின்றன.

எந்தவோர் அரசசார்பற்ற நிறுவனத்திடமிருந்தோ எதுவிதமான நிதியையும் பெறவில்லையென்றே இலங்கை அரசு கூறி வருகிறது. நிர்மாணப்பணிகள் தொடர்பான சகலவிதமான செலவினங்களும் அரசசார் பற்ற நிறுவனங்களால் அல்லது அரசொன்றி னால் மாத்திரமே மேற்கொள்ளப்படவேண்டுமென்ற அடிப்படையில் அரசு இவ்வாறு செயற்பட்டுள்ளது. நிர்மாணப்பணிகளை இன்னமும் ஆரம்பிக்காத அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக அரசு ஆழமாக ஆராய்ந்து வருவதற்கும் இந்த அடிப்படை விதியே காரணமாக அமைந்துள்ளது - இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-206)

## தொழில் திணைக்களத்திற்கு பண்ணையில் நிரந்தரக் கட்டடம்

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்.தொழில் திணைக்களத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் தொழில் திணைக்களத்திற்கு பண்ணை வீதியில் நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்க ஏற்பாடாகி உள்ளது.

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தற்காலிகக் கட்டடத்திற்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வாடகையாகச் செலுத்தப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் காலங்களில் வாடகைக் கட்டணம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டதாலும் நிரந்தரக் கட்டடம் ஒன்றின் தேவையை உணர்ந்தும் யாழ். அரச அதிபரினால் நிரந்தரக் கட்டடத்திற்குரிய காணி வழங்கப்பட்டது. அந்தக் காணியில் கட்டடத்தை நிர்மாணிப்பதற்குரிய ஆரம்ப வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். (9-ரி)

## டிராக்டர் சாரதிக்கு பத்துமாதம் சிறை

தென்மராட்சி,ஓக.16

அனுமதிப்பத்திரமின்றி 'டிராக்டரில்' மணல் ஏற்றிச்சென்ற சாரதிக்குப் பத்துமாத சாதாரண சிறைத் தண்டனை வழங்கப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட வாகனத்தையும் பத்துமாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்கவும் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கொன்றின்மீதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது. உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியமைக்காகக் குறிப்பிட்ட சாரதிக்கு ஏற்கனவே நான்கு தடவைகள் நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டமை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்தே மேற்படித் தண்டனை விதிக்கப்பட்டது. (9-117)

## கிளி பிடிக்க மரமேறிய இளைஞன் விழுந்து காயமுற்றார்

யாழ்ப்பாணம், ஓக.16

கிளிபிடிப்பதற்காகப் பட்ட தென்னை மரத்தில் ஏறிய இளைஞர் அந்த மரம் முறிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்தார்.

வளலாயில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இரத்தினம் கிருஷ்ணராஜ் (வயது 18) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (9-15)

PEPSI பதவி வெற்றிடம் 7UP

பெப்சி, ஒலே நிறுவனம் தகுதியானவர்களிடமிருந்து விற்பனை மேற்பார்வையாளர்களை எதிர்பார்க்கின்றது.

பிராந்தியம் : யாழ்ப்பாணம், கிளிநொச்சி.

தகைமைகள் : G.C.E O/L, A/L

முன் அனுபவம்: விற்பனை, சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தது 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.

மொழிவன்மை : தமிழ், ஆங்கிலம் தேர்ச்சியும் சிங்களம் பேசக்கூடியவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

சம்பளமும் ஏனைய சலுகைகளும் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

Ol'e Marketing (Private) Ltd.
140, Low Level Road, Embulgama, Ranala.

வியாழன் (18.08.2005) காலை 9.30 மணிக்கு சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்

Bastian Hotel
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்
மேலதிக விவரங்களுக்கு 0773-104595

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு
(பாக்கியம்)



யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கைப் பிறப்பிடமாகவும், காரைநகர் மாப்பாணவூரியையும் ஊரெழுவையும் வசிப்பிடமாகவும் தற்காலிகமாக தாவடி வடக்கில் வசித்தவருமாகிய திருமதி. மகேஸ்வரி திருநாவுக்கரசு நேற்று (15.08.2005) திங் கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருணாசலம் திருநாவுக்கரசுவின் மனைவியும் (முன்னாள் சாரதி வ.பி.போ.சபை. காரைநகர் சாலை), குணராசா (குணா - பிரபல மெக்கானிக் கொழும்பு), ஜீவராசா (சிவா-ஜேர்மனி), யோகராசா (மோகன் - குவைத்), உதயராணி (ராணி), பேரின்பராசா (ராஜா- கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் கலாஜோதி (கொழும்பு), ஜெயந்தினி (ஜேர்மனி), சாந்தமலர், யோகநாதன் (அதிபர் பயிற்சிப்பாடசாலை வ.பி.போ.சபை. கோண்டா வில்), கிருஷ்ணவேனி (ராதா - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தபோதினி, தனஞ்தயன், சுதர்சன், சிறியுகன்,கோகுல் (ஜேர்மனி), கஜன் (ஜேர்மனி), கவிதா, கௌசிகா, கஜன், கணேசன், அஜந்தன், துஸ்ஷியந்தன் (லண்டன்) லக்ஸ்ஷிலா, தினேஷ், சஜீஷ், பிரணவி (கனடா), வசிகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி லேன்,
தாவடி வடக்கு, கொக்குவில்.
T.P.: 021-222 5093
0776153794

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(38929)(42-13-34-38)

## நீங்காத நினைவலைகள்

9ஆம் ஆண்டு — 6ஆம் மாதம்

மலர்வு 01.01.1968 — மலர்வு 10.02.1966



உதிர்வு 14.08.1997 — உதிர்வு 13.02.2005

### அமரர் நடராசா ஜெயகரன் (பாலு)

இளமைக் கால வயதினிலே - உம்
இருவரையும் காலனவன்
கவர்ந்து சென்றதேனோ?
பார்போற்றும் இனிய குணம்
கொண்ட வித்தகர்களே!
பண்பான உம் குணத்தால்
பரணியிலேஉயர்ந்து நின்றீர்கள்
பெற்றெடுத்த சொந்தங்கள் ஏங்குதய்யா!
உடன்பிறப்புகள் நிலை தடுமாறுதய்யா!

### அமரர் நடராசா பாஸ்கரன் (காந்)

கானல் நீரென உம் வாழ்வு கரைந்ததோ?
காணமுடியாது தவிக்கின்றோம்
மண்ணுலகம் வாழ்ந்த வாழ்க்கை
போதுமென் றெண்ணியா
விண்ணுலகம் சென்றீர்கள்
நூற்றாண்டு முடியுமுன்பே - காலம்
முடிந்த வாழ்வானதோ
உம் இருவர் வாழ்வும்
உம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்:
அப்பு நாச்சிக்குடாச் சந்தி, முழங்காவில்
துரை ஜெயநாதன் - வானலை தொழில்நுட்பவியலகம் 155ஆம் கட்டை, கிளிநொச்சி.
யோகா - வேலணை, தவம் - மானிப்பாய்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

(P-44506)(42-13-34-38)

# சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கத்தில் வாகன சுத்திகரிப்புச் சேவை வசதி

தென்மராட்சி,ஓக.16

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் வாகன சுத்திகரிப்புச் சேவையினை (சேவிஸ் ஸ்ரேசன்) வழங்கவுள்ளனர்.

சாவகச்சேரி ரயில் நிலைய வீதியில் அமைக்கப்பட்டுள்ள சங்கத்தின் வாகன சுத்திகரிப்பு நிலையம் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் இயங்கவுள்ளது என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னர் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துடன் இணைந்து இயங்கிய வாகனச் சுத்திகரிப்பு நிலையம் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்தது. தற்போது அவ்விடத்தில் எரிபொருள் நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது. (ஐ-117)

# சங்கானை, காரைநகரில் புற்றுநோய்ச் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஓக.16

ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது வாரத்தில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் பணிகள் சங்கானை மற்றும் காரைநகரில் நடைபெறவுள்ளன.

மூன்றாவது வாரத்தின் புதன்கிழமையில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை சங்கானை வைத்தியசாலையிலும் -

பிற்பகல் 2 மணிமுதல் 5மணி வரை காரைநகர் வைத்தியசாலையிலும் -

இச்சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன என்று மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இச்சிகிச்சைகள் புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமாரினால் வழங்கப்படவுள்ளன.

முதலாவது புற்றுநோய்ச் சிகிச்சை முகாம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 07 - 1941



மறைவு 28 - 07 - 2004

அமரர் **நாகலிங்கம் மனோன்மணி**

*திதி: 16.08.2005*

ஆண்டு ஒன்று ஆனாலும் -என்
நினைவிலே அன்புத் தாயாய்
இருக்கும்
மீண்டும் ஒருமுறை பிறப்பீரோ.

இன்று (16.08.2005) செவ்வாய்க்கிழமை மானிப்பாய் ஞானரைவர் கோயிலில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (சி-44507) (29-18-15) *-பிள்ளைகள்.*

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி சிவானந்தன்



அல்வாயைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவானந்தன் நேற்று (15.08.2005) திங்கட்கிழமை இயற்கையெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் முத்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரை - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பிரதாபன் (சுவிஸ்), தேன்மொழி (கனடா), வளர்மதி (சுவிஸ்), மணிவண்ணன் (U.K.), ஆகியோரின் அருமைத் தந்தையும் யோகராணி, தவராஜ், புண்ணியமூர்த்தி, விஜிதா ஆகியோரின் அருமை மாமனாரும் அபினன், சூர்யா, சத்தியா, சேதனன், நிஷானா, கவின், றெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் விவேகானந்தனின் (மாத்தளை) சகோதரனும் சந்திரசேகரம் (சந்திரன்) அவர்களது மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.* (38940) (29-18-15)

*தகவல்:*
*முத்தம்மா (மனைவி).*

### அம்பிகாபதி விசாலாட்சி

நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சீனியர் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகாபதி விசாலாட்சி 14.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிகாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் மகளும் சோதிடக் காலாநிதி ஐயாத்துரை - கமலாம்பாள் தம்பதியரின் மருமகளும் பரமேஸ்வரன் (கிராமசேவையாளர், துணுக்காய்), விக்கினேஸ்வரன் (ஓய்வுபெற்ற நில அளவைப் பகுதி உத்தியோகத்தர்), தவேஸ்வரன் (தபாலக உத்தியோகத்தர், நயினாதீவு), நாகேஸ்வரி, கேதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்கையர்க்கரசி, கதிர்காமசுந்தரி, சிவகாமசுந்தரிஅம்மா, ரவீந்திரன், மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

*2, சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*
T.P. No.: 0776 590389

*ஐ.அ.பரமேஸ்வரன் ,*
*ஐ.அ.விக்கினேஸ்வரன்*
*ஐ.அ.தவேஸ்வரன்*
*(மகன்மார்).*

(38932) (29-18-15)

## விலைப்பட்டியல் பார்வைக்கு வைப்பது கட்டாயம்

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் விலைப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று விலைக் கட்டுப்பாட்டு அதிகாரசபை கடும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் சகல பொருள்களின் விலைகள் பட்டியலில் குறிக்கப்படவேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு பொருள் மீது விலைத் துண்டுகள் இடப்பட்டிருக்கப்படவேண்டும் என்றும் - அதிகார சபை அறிவித்துள்ளது.

இவ்வாறு விலைப்பட்டியலும் விலைத் துண்டுகளும் வைக்கப்படாத வியாபார நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை அறிவித்துள்ளது. (9-202-203)

## பாம்பு தீண்டிய மூவர் ஆஸ்பத்திரியில்

பாம்பினால் கடியுண்ட மூவர் நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த ஞானசேகரம் வாரித்தம்பி (வயது 78), மிருசுவில் உசனைச் சேர்ந்த கஸ்பார் கிறிஸ்துதாஸன் (வயது 53), மிருசுவில் கெற்பலியைச் சேர்ந்த இராசையா நிஷாந்தன் (வயது 12) ஆகியோரே பாம்பினால் கடியுண்டவர்களாவர். (ஐ-117)


கணக்கீடு
திரு.பாலவாசன்
மாலை நேரவகுப்பு
புதிய பிரிவு
A/L 2007
Wed.,Fri. - 4-5p.m.
ஆரம்பம்:
17.08.2005
4p.m.(38890)
D.C.M.

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவைசரளா மற்றும் பலர் நடித்த
பிரியசகி
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.
(இ-44110)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத்,
ரேணுகா மேனன்
பெப்ரவரி 14
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின
அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி,
ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
தாஸ் (சிக்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(இ-43380)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்,
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின
வெளியீடாக அர்ஜுன், சினேகா,கிரண், வடிவேல்
நடித்த

சின்னா
கா.நே.: 10.30,2.30,
6.30,9.30. (பு.நே.)
(இ-43363)


பவள விழா வருடத்தில்
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலய நிறுவுநர்
அமரர் கனகரத்தினம் அவர்களின்

## சிலை திறப்பு விழாவும் பெயர் வளைவு திறப்பு விழாவும்

இடம்: யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
காலம்: 17.08.2005 புதன்கிழமை பி.ப. 2 மணி
தலைவர்: திரு.வீ.மாணிக்கம்
(அதிபர், யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்)
சிலைதிறந்து வைப்பவர்: சு.மோகனதாஸ்
(பழைய மாணவர் சங்கத் தலைவர், துணைவேந்தர்- யாழ். பல்கலைக்கழகம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

அதிபர், ஆசிரியர், மாணவர், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ கனகரத்தினம் ம.ம.வித்தி.
(38942)(29-18-15)

## வைத்தியம்

எலும்பு முறிவு நெரிவு, தசை நரம்பு மூட்டுவாதம், நாள்பட்டநோக்கள், நாரிநோ, விசேடமாக முள்ளந்தண்டு சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். முன்பு வண்ணை சிவன் கோயிலடியில் இயங்கி வந்த சிவன் கோயிலடி, வைத்தியசாலை தற்பொழுது கோப்பாய்ச் சந்தி, கோப்பாய் என்ற முகவரியில் இயங்கிவருகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

Note: 19.08.2005 தொடக்கம் 26.08.2005 வரை வைத்திய நிலையம் மூடப்பட்டிருக்கும். வாடிக்கையான நோயாளர்களை 19.08.2005 ஆம் திகதிக்கு முன்னர் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

T.P. : 0777 727798 (38914)(29-18-15)

Dr. T.**சோமசுந்தரம் விஜயன்**

Note: வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது முதியோர் இல்லத்தில் பணிபுரியும் **திருமதி வி.நாகலட்சுமி** அவர்களின் தாய்

**திருமதி வேலுப்பிள்ளை நாகரத்தினம்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்ம இளைப்பாறிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச முதியோர் இல்லம்,
கைதடி. (38939)(29-18-15)

அத்தியட்சகர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள், முதியோர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரன் கனகாம்பிகை



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரன் கனகாம்பிகை நேற்று (15.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24, திருமகள் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (38943)(29-18-15)

*தகவல்:*
*க.மகேஸ்வரன்*
*(கணவன்).*

### திருமதி சபாபதிப்பிள்ளை பார்வதி (செல்லக்கா)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாபதிப் பிள்ளை பார்வதி (செல்லக்கா) 13.08.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராமநாதர் சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் அருமைத் தாயும் காலஞ்சென்ற கந்தப்பு- மரகதமொழி தம்பதியரின் மகளும் நாகேந்திரம், பொன்னம்மா (இங்கிலாந்து), குமாரசாமி (இங்கிலாந்து), சிவகாமிப்பிள்ளை (இங்கிலாந்து), புஸ்பம் (பாண்டியன்குளம்), சட்டத்தரணி வெற்றிவேல் (இங்கிலாந்து), டாக்டர் மருதையினார் (இங்கிலாந்து) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் குமாரசாமி (இங்கிலாந்து), சத்தியபாமா, விக்னேஸ்வரி (இங்கிலாந்து), சிவசம்பு (பாண்டியன்குளம்), பூபதி (வவுனியா), மணி (இங்கிலாந்து) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2005) புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நெடுந்தீவு மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெடுந்தீவு கிழக்கு,*
*நெடுந்தீவு.* (38931) (29-18-15)

*தகவல்:*
*டாக்டர் மருதையினார் (சகோதரன்).*

### இராமசாமி வைகுந்தவாசன் (ஜேர்மனி)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி வைகுந்தவாசன் நேற்று (15.08.2005) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் இராமசாமி - பத்மலீலாவதி தம்பதியரின் (கனடா) மூத்த மகனும் பரஞ்சோதி - அன்னலட்சுமி (கோண்டாவில் கிழக்கு) தம்பதியரின் மருகனும் நிர்மலாதேவியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் வினித்தா (ஜேர்மனி), சுஜித்தா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினதாசன் (வாசன் ஸ்ரோர்ஸ், குமரகோட்டம் - கோண்டாவில்), சிறினிவாசன் (கனடா), சுபாசினி (கனடா), சிவதாசன் (கனடா), சுவேந்தினி (கனடா), சுகந்தினி (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில்.* (38933) (29-18-15)

*தகவல்:*
*இ.இரத்தினதாசன் (சகோதரன்).*

# தீர்வுக்கான அமைதி முயற்சிகளில் கதிர்காமர் கொலை தாக்கம் செலுத்தும்

## வெளிநாட்டு ராஜதந்திரிகளிடம் அரசு தெரிவிப்பு

கொழும்பு,ஒக.16

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான அமைதி முயற்சிகளில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்துமென்று அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தியபோது வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் பலிஹக்கார, அரசாங்கத்தின் இந்த அச்சத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, அமைச்சர் கதிர்காமரின் கொலைச் சம்பவத்தையடுத்து இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து வெளிவிவகார செயலாளர் இராஜதந்திரிகளிடம் விளக்கினார்.

இந்தச் சம்பவத்தினை அடிப்படையாக வைத்து அமைதி முயற்சிகளை நிறுத்துவது அரசின் அபிப்பிராயமல்லவென்றும், ஆனால், இந்த சம்பவம் அமைதி முயற்சிகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துமென்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-க)

# ஜனாதிபதித் தேர்தல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண. ஓமல்பே சோபித தேரர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிட்டப்பட்டிருந்தனர்.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக்காலத்தை 1999 டிசெம்பர் 22ஆம் திகதியன்று - தேர்தலை அடுத்து - ஆரம்பித்தார் என்று - அது தொடர்பான ஆவண சாட்சியங்களோடு - தமது மனுவில் வண. ஓமல்பே சோபிததேரர் தெரிவித்திருக்கின்றார்.

இதன்படி தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் 22ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22ஆம் திகதிக்கும் நவம்பர் 22ஆம் திகதிக்கும் இடையில் நடத்தப்படவேண்டும். அதற்கான வேட்பு மனு செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்துக்கு முன்பதாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அத்தோடு இத்தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை ஒகஸ்ட் 27ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 9ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்தில் தேர்தல் ஆணையாளர் விடுக்கவேண்டும். - என்ற விவரங்களை அதற்கான அரசமைப்பு மற்றும் சட்ட விவரங்களோடு இந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர்.

இந்த அடிப்படையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த உத்தரவிடும்படி அவர் கோரியிருக்கின்றார்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் அவர் நீதிமன்றத்திடம் மேலும் முக்கியமாகக் கோரியிருந்ததாவது:-

✱ இவ்வாண்டு இறுதிக்கு முன் மேற்படி தேர்தல் நடத்தப்படாவிட்டால் மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் என அறிவிக்கவேண்டும்.

✱ தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 1999 டிசெம்பர் 22ஆம் திகதியுடன் முடிவடைவதாகப் பிரகடனப்படுத்தவேண்டும்.

✱ மனுவில் விவரித்தபடி இவ்வருட இறுதிக்குள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். என்று உத்தரவிடவேண்டும்.

✱ அத்தினத்துக்குள் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுத்து தேர்தலை முன்னெடுக்கும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடவேண்டும்.

✱ ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பை விடுக்கும்படி தேர்தல் ஆணையாளரைப் பணிக்கவேண்டும்.

- இவையே மனுவில் கோரப்பட்ட முக்கிய அம்சங்களாகும்.

இந்த மனுவுக்கான தனது பதிலையே தேர்தல் ஆணையாளர் சத்தியக்கடதாசி மூலம் நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இலங்கை அரசமைப்பின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்குஒரு மாதத்திற்குக் குறையாத காலத்திற்குள்ளும் இரண்டு மாதத்திற்கு மேற்படாத காலத்திற்குள்ளும் ஜனாதிபதி தேர்தலுக்கான நடவடிக்கையில் தேர்தல் ஆணையாளர் என்ற ரீதியில் ஈடுபடுவதற்கு தான் இணங்குகிறார் எனவும் தயானந்த திஸநாயக்க தனது சத்தியக் கடதாசியில் தெரியப்படுத்தியுள்ளார்.

தேர்தல்கள் சட்டத்தின்படியும் அரசமைப்பின் படியும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்கும் அதிகாரமும், வேட்பு மனுக்களைக் கோரும் அதிகாரமும் தேர்தல் ஆணையாளருக்கே இருக்கின்றது என்பதை நீதிமன்றிற்குச் சுட்டிக்காட்டியுள்ள தயானந்த திஸநாயக்க, வேட்பு மனுக்களை கோரி 4 வாரத்திற்குக் குறையாதும், 6 வாரத்திற்கு மேற்படாததுமான காலத்தில் வாக்களிப்புக்கான திகதியை அறிவிக்க தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட் டுள்ளதாகக் கூறியிருக்கும் தேர்தல்கள் ஆணையாளர், அதனடிப்படையிலான தனது முடிவின்படி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 22ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

(ஐ-க-13)

# புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

குறிப்பிட்ட இளைஞன் விடுதலைப் புலிகளின் முன்னணி உறுப்பினர்களில் ஒருவரென விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

கண்டியில் அவர் தங்கியிருந்த இடங்கள் அவருக்குரிய தொடர்புகள் என்பன பற்றி பொலீஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ-க)

# கொலையாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அக்காலப் பகுதியில் கதிர்காமரைக் கொலை செய்வது தொடர்பான உளவு வேலைகளில் அவர்கள் ஈடுபட்டிருந்திருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகிக்கின்றனர் என்று கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வீட்டின் மேல்மாடியில் இருந்து கதிர்காமரை இலக்குவைப்பதற்குத் தடையாக இருந்த மரக்கிளைகள் வெட்டி அகற்றப்பட்டிருந்ததும் தெரியவந்துள்ளது. இது குறித்து வீட்டில் தங்கியிருந்த தம்பதியினரிடம் பொலீஸார் விசாரித்தபோது தோட்டத்தைத் துப்புரவு செய்த பணியாளர்களே அந்த மரக்கிளைகளை வெட்டி அகற்றியிருந்தனர் என்று தெரிவித்திருக்கின்றனர்.

சினைப்பர் தாக்குதல் குறி தவறும் பட்சத்தில் கதிர்காமரை கிரனேட் லோஞ்சர் கொண்டு தாக்குதல் நடத்த கொலையாளிகள் திட்டமிட்டிருக்கவேண்டும் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். கிரனேட் ஏவப் பயன்படுத்தப்படும் துப்பாக்கி ஒன்றும் வெடிக்காத நிலையில் இரண்டு கிரனேட்டுகளும் அயலில் பற்றைக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

(ஐ-206)

# கதிர்காமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் பொறுப்பேற்கப்பட்டது.

இதனையடுத்து மதத் தலைவர்களின் உரைகள் இடம்பெற்றன. பின்னர் அரச தரப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுதாப உரையை ஆற்றினார்.

நேற்றைய இறுதிக்கிரியைகளில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும், வெளிநாட்டு நிறுவனங்களின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

பிரதமரின் உரையினை அடுத்து லக்ஷ்மன் கதிர்காமரின் பூதவுடல் அடங்கிய பேழை பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட சிதைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. பின்னர் சமய அனுஷ்டானங்களின் பிரகாரம் சிதைக்குத் தீ மூட்டப்பட்டது.

கதிர்காமரின் மகன் சஜித் கதிர்காமரும் மருமகன் கவி ஜயவர்த்தனவும் அவரது சிதைக்குத் தீ மூட்டினர்.

நேற்றைய இறுதிக்கிரியை நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கலந்துகொண்டார். திருமதி கதிர்காமரை அரவணைத்து அவர் ஆறுதல் கூறிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

(ஐ-க-13)

# ஜனநாயகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ராஜீவ் காந்தி ஆகியோர் வரிசையில் இன்று லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்துவிட்டார். அவரது கொலையும் ஒரு பயங்கரவாதச் செயல். இந்தப் பயங்கரவாதத்தை உலகிலிருந்து துடைத்தெறிந்து ஜனநாயகத்தை கட்டியெழுப்ப அனைத்துத் தரப்புகளும் அணிதிரளவேண்டும்.

கதிர்காமர் எமது தேசிய வீரர், இலங்கை வரலாற்றில் அவருக்கு முக்கிய இடமுண்டு, மக்களின் மனதிலிருந்து அவரை அகற்றவே முடியாது. பயங்கரவாதத்தை ஒழித்து ஒரு ஜனநாயக சமூகத்தை கட்டி எழுப்ப அவர் அரும்பாடுபட்டார். அவரை இலங்கை மக்கள் என்றும் நினைவுகூருவார்கள். அவரின் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

கங்கை, யமுனை, காவேரி போன்ற நதிகள் மூன்றும் இறுதியில் கடலில் ஒன்று சேர்ந்து சங்கமிக்கின்றன. இதுபோன்றே உலகநியதியும் என்று புத்தர் போதித்தார். அவர் போதித்தது போன்றே தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என அனைவரும் ஓரணியில் சேர வேண்டும் என்று கதிர்காமர் விரும்பினார். உலகுக்கும் இதே கருத்தை அவர் எடுத்துரைத்தார். அதை உலகநாடுகளும் ஏற்றுக் கொண்டன. எனவே, உலக நாடுகள் அனைத்தும் பயங்கரவாதத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட எம்முடன் இணைய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் - என்றார் அவர்.

(ஐ-க)

# பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று விஜயகாந்த எதிர்பார்கிறார்.

நடிகர் விஜயகாந்த், விடுத்லைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தீவிர விசுவாசி என அடையாளம் காணப்படும் ஒருவர். ஈழத்தமிழர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு சமயங்களில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவரது கட்சியின் பிராந்திய மகளிர் அணியை நேற்றுமுன்தினம் சேலத்தில் ஆரம்பித்து வைத்தார் விஜயகாந்த். அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

எம்.ஜி.ஆருடன் என்னை ஒப்பிட்டு அழைக்கவேண்டாம் என ரசிகர்களுக்கு அன்று கட்டளையிட்டும் அவர்கள் கேட்கவில்லை. அதற்கு நான் என்ன செய்யமுடியும்? என் ரசிகர்கள் எழுதும் சுவர் விளம்பரங்களை மாற்றுக் கட்சியினர் அழிக்கின்றனர். சுவர் விளம்பரங்களையே ஏற்காத மாற்றுக் கட்சிகள் எப்படி மக்களைக் காப்பாற்றப் போகின்றன. அதுவும் அவை வளர்ந்துவிட்ட கட்சிகள். நாங்கள் இப்போதுதான் அடியெடுத்து வைத்துள்ளோம். ஆனால், நாங்கள் வளர்ந்துவிட்டோம் என்ற அச்சத்தில் இப்படி நடந்துகொள்கின்றனவா அவை?

இதுவரை என் ரசிகர்கள் பல கட்சியில் இருந்தார்கள். இப்போது நான் கட்சி துவங்குவதால் எந்த ரசிகர்கள் வந்தாலும் ஏற்றுக் கொள்வேன். தமிழக அரசியலில் என் கட்சி மாற்றுக்கட்சியாக அமையாது. ஆனால், மாற்றத்தை ஏற்படுத்தும் சினிமாவைப் போல அரசியலிலும் தன்னம்பிக்கையோடு போராடுவேன். என்.டி.ஆர்., எம்.ஜி.ஆர்.,ஜெயலலிதா போல அரசியலில் வெற்றிபெறுவேன். ஆனால், நான் யாரையும் சார்ந்து இருக்கவில்லை.

அரசியலில் எனக்கு நடிக்கத் தெரியாது. ஊழலில் திளைத்த மாற்றுக் கட்சித் தலைவர்கள் என் கட்சிக்கு வந்தால் தொண்டனாகத்தான் இருக்கமுடியும். அன்பு, அறம், ஆற்றல் என்று என் கட்சிக் கொடிக்கு விளக்கம் அளித்தாலும் மக்களைக் காப்பதே என் கட்சியின் கொள்கை.

தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றிப் பேசவேண்டாம். இருந்தாலும், உண்மையான தமிழன் ஒவ்வொருவனும் பிரபாகரனுக்கு ஆதரவு தெரிவிப்பான். அந்த வகையில் பிரபாகரன் வெற்றிபெறும் வரை நான் பிறந்த நாள் கொண்டாடமாட்டேன் என்று எனக்குள் சபதம் ஏற்றுள்ளேன்.

சென்னைக்கு அடுத்தபடியாக சேலத்தில் மகளிர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மத்தியில் எனக்கு நிறைய செல்வாக்கு உள்ளது. அவர்களிடமிருந்து நம்பிக்கையூட்டும் கடிதங்கள்,தொலைபேசி அழைப்புக்கள் ஏராளமாக வருகின்றன. மதுரை மாநாட்டில் எல்லாக் கேள்விகளுக்கும் விடை கிடைக்கும்.


- இவ்வாறு நடிகர் விஜயகாந் கூறினார்.

(ஐ-க)

## மரண அறிவித்தல்

### இரத்தினகோபால் - சிவனேந்திரராசா (ரவி)

(தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினகோபால் சிவனேந்திரராசா (ரவி) அவர்கள் நேற்று (15.08.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினகோபர்ல் - டில்லியம்மா தம்பதியரின் அன்பு மகனும் புவனேந்திரராசா, வனஜாதேவி, விமலாதேவி ( லதா -Esty மெடிக்கல்), கரன் (ரக்ரர் கராச் சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறீகரன் (மந்திகை அரசினர் வைத்தியசாலை), நந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2005) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'வனஜா வாசா'*
*மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை*

(38944)

தகவல்:
**குடும்பத்தினர்.**

PC Accessories Peripherals

TV Card | Network cards | Head phones
Woofers,2.1,4.1,5.1 | Hub/Switch | Cartridges
UPS | Memory cards | Ribbons
Pen drives | Fax modems | Toners
Printers | Capture cards | Refills
Combo/DVD Drives | wireless keyboard | Photo quality papers
Digital Cameras | wireless mouse | USB hubs
Scanners | Home theater sys. | Power supply

VISIT FOR SPECIAL PRICES
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி. தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு
புதிய பாடத்திட்டத்தில
இரசாயனவியலில் புகுத்தப்பட்ட
பகுதிகளிற்கான எதிர்பார்ப்பு
வினாக்களை உள்ளடக்கியது.
ஆரம்பம்:- 17.08.2005 புதன்
இடம்:- NEW SCIENCE CENTRE
(யாழ்நகர்)
(38945)
By. அன்பழகன் B.Sc.

N.C.A
K.K.S. Road,Inuvil
தரம்-06முதல் 11வரை புதிய பிரிவுகள
ஆரம்பம்:- 16.08.2005 Tue.4p.m.
எமது வழமையான ஆசிரியர் குழு
(38913) -நிர்வாகி.

கணக்கீடு
திரு.N.சதீஸ்
A/L-2006
(38915)
கிரயக்கணக்கீடு
ஆரம்பம்:- 17.08.2005 Wed.4p.m.
N.C.A
K.K.S. Road,Inuvi

Internet & e-mail Workshop
இணையமும் மின்னஞ்சலும்
2 Days 3Hours Per Day
இம்மாதம்20ஆம்21ஆம் திகதிகளில் கட்டணம் 600/=மட்டுமே
முதல் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
திறமையானோருக்கு Dip.in Web & Multimedia கற்கைக்கான புலமைப்பரிசில்
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும், >>MCS,324, Palaly Road, Jaffna. பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP Supported By UNDP/JRRP

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.